Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 07 சனிக்கிழமை (23.07.2011) பக்கங்கள் 12 + IV ஓசை – 297



சிறிய நாடுகள் அறிய வேண்டியது

06





3 ஆவது முறையாக சம்பியன்

08



உள்நுழைய இரண்டு இரகசிய வழி

11



இவர்கள் ஏன் எமக்கு வேண்டாம்

I-IV

# வளம் பெறும் வழியில் மக்களது நம்பிக்கை



நீதியான, நேர்மையான தேர்தலே எங்களுடைய விருப்பம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரது யாழ். விஜயங்கள், அந்த நம்பிக்கையையே மேலும் உறுதிப்படுத்தின என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

சில கட்சிகள் பொய்ப்பிரச்சாரங்கள் மூலம் மக்களைத் திசைதிருப்பி, அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதையெல்லாம் கிடைக்கவிடாமல் செய்து அவர்களது துன்பத்தை அரசியலாக்கப் பார்க்கிறார்கள். சில தமிழ் ஊடகங்களும் அதற்கு உதவிபுரிந்து வருகின்றன. மக்களது வாழும் விருப்பத்திற்குத் தடையாக உள்ள இவர்களது நோக்கம் மக்களை மீண்டும் பழைய அவலங்களுக்குத் தள்ளுவதே. இந்தத் தடைகளை எல்லாம் தாண்டி மக்களுக்குக் கிடைக்கவேண்டியவற்றைப் பெற்றுக்கொடுப்பதே எமது கடமையும், பணியுமாகும்.

கடந்த காலத்திலிருந்த புறக்கணிப்புகள் போலல்லாது, தற்போதைய அரசாங்கத்தின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு, எம் மக்களைப் பழையபடியும் சகலவிதத்திலும் உயர்ச்சி பெற்ற சமூகமாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. குடாநாட்டு மக்கள் இதனை நன்கு புரிந்துகொண்டுள்ளார்கள், தாம் மீட்சிபெற்று வருவதை அவர்கள் உணர்கிறார்கள். நம் பிரதேசங்கள் இழந்தவைகளைத் திரும்பப் பெற்று வளமடைந்துவிடும் என்பதை அவர்கள் நம்புகின்றார்கள். அந்த வகையில் அவர்கள் இந்தத் தேர்தலை எதிர்கொள்வார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## அங்கீகரிக்கப்பட்ட ஆவணத்துடன் வாக்களிப்பதற்குச் செல்லவும்


### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்களிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணமொன்றை வாக்குச் சாவடிக்கு எடுத்து செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டையுடன் செல்லுபடியான அடையாள ஆவணமொன்றை சமர்ப்பித் தல் அவசியமாகும் என நியூஸ் பெஸ்டுக்கு அளித்த விசேட செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, வயோதிபர் அடையாள அட்டை, மதகுருமாருக்கான அடையாள அட்டை அல்லது தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்பிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.



இந்நிலையில் அங்கவீனமுற்ற மற்றும் விழிப்புலனற்ற வாக்காளர்கள் தமக்கு உதவியாக ஒருவரை வாக்குச் சாவடிக்கு அழைத்துச் செல்லமுடியும் என்று குறிப்பிட்ட அவர் இதற்காக கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் விண்ணப்பபடிவத்தை நிரப்பி அரச வைத்தியர் ஒருவரினால் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அச்சம், பீதி அற்ற சூழலில் தேர்தல்; தமிழ் மக்கள் வாக்களிப்பில் ஆர்வம்

### தேசிய கண்காணிப்பு நிலைய அமைப்பாளர்

வடமாகாண மக்கள் கடந்த காலங்களைவிடவும் இம்முறை தேர்தல் குறித்து மிக ஆர்வமாக உள்ளார்கள் என்று தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரஸங்க ஹரிச்சந்திர நேற்றுத் தெரிவித்தார்.

பயங்கரவாதம் முழுமையாக ஒழிக்கப்பட்ட பின்னர் வடபகுதியில் நடை பெறும் முதலாவது தேர்தல் இதுவாகும். அச்சம், பீதியற்ற சூழலில் இத்தேர்தல் நடைபெறுவதன் பயனாகவே வடமக்கள் அதிக ஆர்வமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

65 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் 250 பேரை ஈடுபடுத்துவதற்கு தமது நிலையம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாளை 23 ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சி சபைகளுககான தேர்தல் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தெளிவு

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கடலில் குளிக்கச் சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுக் கடலில் உறவினர்களுடன் குளிக்கச் சென்ற முதியவர் ஒருவர் மயங்கிக் கடலில் விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

ந.கிருபானந்தன் (வயது-56) என்பவர் தனது உறவினர்களுடன் கடலில் குளிக்கச் சென்றதாகவும், அப்போது மயக்கமடைந்த அவர் கடலில் வீழ்ந்த போது உறவினர்கள் அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக உறவினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# கைப்பையில் இருந்த பணம் அபேஸ் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

விசுவமடுவிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தில் பெண்ணின் கைப்பையில் இருந்த ஒரு தொகைப் பணம் களவாடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பேருந்தில் பயணித்த குறித்த பெண் யாழ்ப்பாணம் செல்வதற்காக பரந்தன சந்தியில் இறங்கியபோது தனது கைப்பையைப் பேருந்தினுள் வைத்திருந்தமை தெரியவர அப்பெண் முச்சக்கர வண்டியொன்றின் உதவியுடன் அப்பேருந்தை வைத்திசாலைக்கு முன்பாக வழி மறித்தார்.

உடனே பேருந்தினுள் சென்று பார்த்த அப்பெண் தனது கைப்பை இருப்பதை கண்டு அதனைத் திறந்து பார்த்த போது உள்ளிருந்த பணம் திருடப்பட்டுள்ளது தெரிய வந்தையடுத்து, கடமையில் இருந்த பொலிஸார் இப்பேருந்தில் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய போது அந்நபரின் சேட்டினுள் பணம் இருப்பது தெரியவந்தது.

இதனை அடுத்து குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது நீதிபதி குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (77)

# கூட்டம் ஒத்திவைப்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுக்கான கூட்டம் இன்று நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா தெரிவித்தார். (104)

# பத்து ரூபா திருடன் விளக்க மறியலில்

கிளிநொச்சி பாரதிபுரம் சூசைப்பிள்ளையார் கடைப் பகுதியிலுள்ள வர்த்தகரது கடையில் இடம்பெற்ற திருட்டு முயற்சி தோல்வியில் முடிவடைந்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி வர்த்தகரது கடையின் பூட்டை உடைத்து உள்நுழைந்த திருடர் அங்கிருந்த 10 ரூபா பணத்தையும் வானொலிப் பெட்டியையும் திருடிக்கொண்டு வெளியே வந்த சமயம் காவலில் இருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் திருடனை கையும் மெய்யுமாகப் பிடித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (77)

# உணவில் நிற சுவையூட்டிகள் கலப்பு; எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

உடல் நிலைக்கு பாதகத் தன்மையை ஏற்படுத்தக்கூடிய சில நிறச்சுவையூட்டிகளைப் பயன்படுத்திச் சமைக்கப்பட்ட உணவு பொருட்களை விற்பனை செய்யும் உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உணவுக் கண்காணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறச்சுவையூட்டிகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை அடுத்தே கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

வெள்ளை அரிசியினை சிகப்பு நிற அரிசியாக உருமாற்ற உடலுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்கை நிறச்சுவையூட்டிகளை ஒரு சில உணவு விடுதியினர் பயன்படுத்துவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

# இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஹிரா இஸ்லாமிய மீள்எழுச்சி கல்வி மையத்தின் தலைவர் எம்.ஏ.ஸி.அமீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஒஸ்மானியாக் கல்லூரி, நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (105)

# தனக்குத்தானே தீ மூட்டியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் செழியன் வீதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சி.தமிழ்ச்செல்வி (வயது-34) என்பவரே எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

# மீள்குடியேற்றத்தை அடுத்து காடுகளை துப்புரவு செய்யும் மக்கள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள கைவேலி, கோம்பாவில் ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இம்மக்கள் பற்றைக்காடுகளை படிப்படியாகத் துப்புரவு செய்து குடிசை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மீள்குடியேற்றத்தின் பின்னர் இப்பிரதேசத்தில் ஒருவர் பாம்புக் கடிக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யுத்த அனர்த்தம் நடைபெற்று நீண்ட காலமாக மீள் குடியேற்றம் செய்யப்படாதிருந்த மேற்படி பிரதேசங்கள் பற்றைக் காடுகளாக காணப்படுவதாகவும், இங்கு பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பரந்தன், புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை ஊடான முல்லைத்தீவுக்கான போக்குவரத்து நேற்று முன்தினம் முதல் தடையின்றி இடம்பெற்று வருவதால் மக்கள் தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (40)

# மாடிக் கட்டடம் அமைக்கப்படுகிறது

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு திருமுறுகண்டி இந்து வித்தியாலயத்தில் இரு மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகப் பாடசாலை சமூகத்தினால் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இப்பாடசாலைக்கு இரு மாடிக் கட்டடங்களை அமைப்பதற்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ அண்மையில் நாட்டி வைத்தார். (121)

# குடிநீர் வழங்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபாடு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் பிரதேசத்திலுள்ள சில இடங்களில் நிலவி வந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இராணுவத்தினர் குடிநீர் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் வேட்டையடைப்பு, ஆலங்குளம், உயிலங்குளம், தெனியங்குளம் ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இதனையடுத்து இம்மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் இராணுவத்தினர் நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீரை மக்களுக்கு வழங்கி வருகின்றனர். (121)

# முகாமைத்துவ பீடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா



யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு திருநெல்வேலி கலாசாலை வீதியில் 30 பரப்பு காணியில் அமையவிருக்கும் புதிய கட்டடத்தின் அடிக்கல்லுக்கான நினைவுக்கல் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியை செல்வி வசந்தி அரசரட்ணம் அவர்களால் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வு யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் தேவராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## வாழ்க வளமுடன்

### தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்

பெயர்: செ.மரியன் பெவன்

முகவரி: உயரப்புலம், ஆனைக்கோட்டை.






பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

உண்மை, அன்பு நேர்மை ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது, நீ நேர்மை உள்ளவனாக இருக்கிறாயா? இறந்து போனாலும் சுயநலம் இல்லாதவனாக இருக்கிறாயா? அப்படியானால் மரணத்திற்கும் நீ அஞ்ச வேண்டியதில்லை.

- விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கைவிட்டு ஓடுபவர்கள் வேண்டாம்!

இன்று வடக்கில் 19 சபைகளுக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுகின்றது. கடந்த சில நாட்களாக நாங்கள் பல்வேறு உணர்ச்சிகளாலும், காதில் விழுந்த வார்த்தைகளாலும் திக்குமுக்காடிப் போயிருக்கிறோம்.

மனித சிந்தையானது முதலில் உணர்ச்சிகரமான விஷயங்களால் தாக்குண்டு கொந்தளிக்கிறது. அது அடங்கிய பிறகே அறிவைப் பயன்படுத்தி யோசித்துப் பார்க்கிறது. எழுச்சி மனோநிலையில் எடுக்கும் முடிவுகள் நமக்கும் பிறருக்கும் ஆபத்து விளைவிப்பவையாக அமைந்து விடுகின்றன.

ஷேக்ஸ்பியரின் சீசர் நாடகத்தில், சீசரின் கொலைக்குக் காரணமான சின்னா என்பவனைத் தேடிக் கிளம்புகிறது மக்கள் திரள். இடையில் ஒரு சின்னா என்பவனைக் கண்டு துரத்துகிறது. அவன், "நான் அந்த சின்னா இல்லை, கவிஞன் சின்னா" என்று சொல்லியபடி ஓடுகிறான். "பரவாயில்லை, அவன் கவிதைகளுக்காக அவனைக் கொல்லுங்கள்" என்று துரத்துகிறது மக்கள் கூட்டம்.

உணர்ச்சிவசப்பட்டு விட்டால் நிதானம் தப்பி விடுகிறது. அதனால்தான் போலி அரசியல்வாதிகளும், ஏமாற்றுப் பேச்சாளர்களும் மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதிலேயே கவனங் கொள்கிறார்கள். மாற்று இனத்தவர்கள் மீது, மாற்று மொழி பேசுகிறவர்கள் மீது, மாற்று மதத்தினர் மீது, மாற்று கலாசாரத்தினர் மீது வெறுப்பைக் கக்கி விரைவில் உணர்ச்சிவசப்படுத்தி விட முடிகிறது.

வெறுப்பு, இலகுவில் மக்களை ஒன்றுபடுத்துகிறது; ஆவேசப்படுத்துகிறது. எனவே, மக்களை ஒன்றுபடுத்திய திரளாக்கித் தங்கள் சுயலாபங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறவர்கள், உணர்ச்சிகரமாகப் பேசி மக்களைக் கொந தளிக்க வைக்கிறார்கள். நாம் எல்லாவற்றையும் இழந்து மூளிகளானாலும் பரவாயில்லை; எதிரிக்கு சகுனப் பிழையாகி விட்டால் போதும் என்ற கொதி நிலைக்கு மக்கள் ஏமாற்றாய் இழுத்துச் செல்லப்பட்டு விடுகிறார்கள்.

அவதானமாகச் சிந்திக்காவிட்டால் நாம் அனைத்தையும் இழந்தவர்களாகி விடுவோம். இனவாதமும், நம் பழைய வெறுப்புகளும், குரோதங்களும் தூண்டப்பட்டு, நாம் சிலரால் உசுப்பிவிடப்படுவது எதற்காக என்று கொஞ்சம் சிந்தித்தால் நமக்கு வெளித்துவிடும்.

நம் இன்றைய வாழ்வும், எதிர்காலமும்– கடந்த கால வெறுப்புக்களை உயர்த்திப் பிடிப்பதால் நேர்படப் போவதில்லை. பகைமறப்பும் நல்லிணக்கமும் என்பது நம் மக்களது வாழ்வுக்கும் எதிர்காலத்திற்குமான தேவை. வெறுப்பையும் குரோதத்தையும் தூண்டி விடுவதானது அதே பழைய அழிவும் சிதைவுகளுமான வாழ்விற்குத் திருப்பியழைத்துச் செல்வோரின் உபாயமே!

அவர்கள் உணர்ச்சிவசப்படுத்தவும் வெறுப்பேற்றவும் எதையெதையோ பேசிக்கொண்டிருப்பார்கள். காற்றில் முழம் அளந்து கொண்டிருப்பார்கள். நாம் அவர்களது வெறும் பேச்சில் ஏமாந்து பொங்கிக் கொண்டிருக்க முடியாது.

நாம் திரும்பத் திரும்பப் பழைய சேற்றுக்குள் வழுக்கிக் கொண்டிருக்க முடியாது. நமது வாழ்வைச் செப்பனிட்டு, எதிர்காலத்தை நம்பிக்கைக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும்.

நாம் போக வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது. மாறியிருக்கும் உலகின் போக்குகளையும், யதார்த்தங்களையும் நாம் கவனத்தில் எடுத்தே மேற்செல்ல வேண்டும். பழங்குடிச் சமூகங்கள் போல வெறும் வீரம் பேசிப் பேசிப் பிற்பட்டுப் போய்க் கொண்டிருக்க முடியாது.

முப்பது வருட காலப் போரால் நாம் நொந்து பின்தங்கியது போதும். இதுவரை இழந்ததும் போதும். நமது வாழ்வும், கல்வியும், பொருளாதாரமும், பிரதேசமும் நிமிர்வு பெற வேண்டும். எதிர்ப்பும், வெறுப்பும், வெறும் வீர வசனங்களும் நமது வாழ்வுக்கும் நிமிர்வுக்கும் துணையாக மாட்டா. அவற்றை மறுப்போர்க்கு உதவுவதாகவே இருக்கும்.

ஏமாற்றுப் பேச்சுக்களிலும், உணர்ச்சிகரமான திசை திருப்பல்களுக்கும் ஆட்பட்டு நமது வாழ்வைச் செழுமைப்படுத்திக் கொள்ளக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை வீணடித்துவிட வேண்டாம்.

நாம் துன்பப்பட்ட சமயங்களில் ஓடி ஒளிந்து விட்டு, இப்போது வந்து நீலிக்கண்ணீர் சொரிபவர்கள் நமக்கு வேண்டாம். நம்முடனே நின்று, துன்பங்களிலிருந்து மீள ஆவன செய்து கொண்டு, வாழ்வை வளப்படுத்தச் சாத்தியபூர்வ வழியறிந்து ஓடோடி உதவுகிறவர்களைப் பலப்படுத்துவோம். அவர்களே நம் தேவைகளனைத்தையும் நிறைவேற்றுவர். அடுத்த கட்டமான உரிமைகள், அதிகாரம், தீர்வுக்கும் அழைத்துச் செல்வர்.

– ஆசிரியர்.

# ஓமந்தை மத்திய கல்லூரி திறப்புவிழா மூன்றாவது தடவையும் பிற்போடப்பட்டது

(வவுனியா)

கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு நெருக்கு வாரங்களுக்கு மத்தியில் ஓமந்தை பிள்ளையார் கோயிலில் இயங்கி வரும் ஓமந்தை மத்திய கல்லூரி நேற்றுமுதல் சொந்த இடத்தில் இயங்குவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் ஆளுநர் மற்றும் அதிகாரிகள் வருகைதராத காரணத்தால் மீளவும் பழைய இடத்திலேயே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9 மணியளவில் கல்லூரி அதிபர் அரியரட்ணம் தலைமையில் நடைபெறவிருந்த இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்விப் பணிபாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவன் மற்றும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொள்வதாக இருந்தது. இந்தத் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகளைப் பாடசாலைச் சமூகம் மேற்கொண்டிருந்ததுடன் இதற்காக மாணவர்களையும் தயார்படுத்தி வைத்திருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் அனைவரும் திறப்பு விழா நிகழ்விற்காக நீண்ட நேரம் காத்திருந்த நிலையில் ஆளுநர் மற்றும் அதிகாரிகள் இந்தத் திறப்பு விழாவிற்கு வருகைதர முடியாமல் உள்ளனரென வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம், பாடசாலை அதிபரிடம் தெரிவித்தையடுத்து திறப்பு விழாவும் கைவிடப்பட்டதுடன், திறப்பு விழாவிற்காக கூடியிருந்த அனைவரும் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

ஏற்கனவே கடந்த யூன் மாதம் 21ஆம் திகதி கடந்த எட்டாம் திகதியும் கல்லூரி மீளவும் சொந்த இடத்தில் இயங்குவதற்கான முயற்கிகள் மேற்கொள்ளப்பட்டு இறுதிநேரத்தில் கைவிடப்பட்டதும், நேற்றைய தினமும் திறப்பு விழா கைவிடப்பட்டதுடன் மூன்று தடவைகள் திறப்புவிழா கைவிடப்பட்டுளளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் கல்லூரியில் கல்வி பயிலும் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலே தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

# கடத்தல் நடவடிக்கைகள் குறித்து புலனாய்வுத்துறையினர் விசாரணை

(கொழும்பு)

இலங்கைக்குள் போதைப் பொருட்களை கடத்துவதற்கு மன்னார் வளைகுடா தீவுகளை, கடத்தல்காரர்கள் தங்கு தளமாக பயன்படுத்துகின்றனரா என புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர். இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின், கடத்தல் முற்றிலும் நின்றுவிட்டது என பாதுகாப்புப் பிரிவினர் அரசுக்கு அறிக்கை அனுப்பினர்.

இந்த நிலையில் இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதி கிராமங்களில் இருந்து கடத்தல் பொருட்களை படகு மூலம் தீவுகளில் சேமித்து, இலங்கையிலிருந்து சமிக்ஞைகள் கிடைத்தவுடன் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. கடந்த புதன்கிழமை வாலி நோக்கம் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த இருந்த, 36 கிலோ கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர். அதே தினம், ராமேஸ்வரம் அரிச்சல்முனை பகுதியில் இலங்கையிலிருந்து மர்மப் படகு வந்து ஒருவரை இறக்கிவிட்டு திரும்பிச் சென்றுள்ளது. கஞ்சா கைப்பற்றியுள்ள நிலையில், மர்மப் படகு வந்து திரும்பியுள்ளதால், தீவு வழியாக கடத்தல் பொருள் பரிமாற்றம் நடந்திருக்க வாய்ப்புள்ளது என்ற சந்தேகத்தில் புலனாய்வுப் பிரிவினர் விசாரித்து வருகின்றனர்.

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 100 குளங்கள் புனரமைக்கப்படும்

## -கமநல சேவைகள் அமைச்சர் தகவல்-



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக 100 குளங்கள் புனரமைப்பு செய்யப் படவுள்ளது. அந்த வகையில் முதற்கட்டமாக 69 குளங்கள் இந்த வருடத்திற்குள் புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுப்பட்டுள்ளதுடன் மிகுதி 31 குளங்களும் புனரமைப்பு செய்யப்படவிருப்பதாகவும் கமநல சேவைகள் அமைச்சர் சிறிசேன தெரிவித்துள்ளார் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரக்கறிச் செய்கை, வெங்காயச் செய்கை மரமுந்திரிகை செய்வோருக்கும் உடனடியாக உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் வடக்கில் எந்த இடத்திலும் பசளையினை எடுப்பதற்கு இலவசமாக அட்டை(காட்) வசதி செய்துகொடுக்கப்படவுள்ளது.

ஏ-9 போன்ற பெருந்தெருக்களை காப்பற்வீதியாக அமைத்துவருகின்றோம். அதே போன்று ஏ-32 வீதி மற்றும் காங்கேசன் துறை துறைமுகம் என்பனவும் புனரமைக்கப்படவிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் உங்கள் ஊரில் உள்ள வீதிகளையும் திருத்தி அமைக்க இருக்கிறோம். அத்தோடு பழைய கட்டடங்களை விட்டு புத்தம்புதிய கட்டடங்களையும் மக்களிற்காக அமைத்துவருகின்றோம். மின்சாரம் சகல இடங்களிற்கும் வழங்க நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம். உங்கள் பகுதியில் சேதமடைந்து உள்ள கோயில்களையும் திருத்தி நிர்மானம் செய்யவுள்ளோம் என்றார்.

## சிறைச்சாலைக் காவலர்களுக்கு உடற்தகைமைச் சோதனை

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலை காவலர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான உடற்தகுதிச் சோதனை ஆகஸ்ட் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளதாக யாழ்ப்பாண சிறைச்சாலை அதிகாரி அறிவித்துள்ளார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் காலை 11மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பரீட்சையில் பங்கு பற்றுவதற்காக விண்ணப்பித்திருந்தவர்கள் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபிக்க அழைப்புக்கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

2.4 கிலோ மீற்றர் ஓடுவதற்கும் Squat (ஸகொட்) பரிசோதனை நடைபெறவுள்ள தால் ஆண்கள் வெள்ளை அல்லது மெல்லிய வர்ணத்திலான அரைக்கை ரீசேட் கட்டை காற்சட்டை அல்லது track suit ஸ்போட்ஸ சப்பாத்துடனும், பெண்கள் அதே போன்ற ரீசேட் மற்றும் பாவாடை அல்லது அரைகாற் சட்டை அல்லது 'றைக் சூட்' விளையாட்டுச் சப்பாத்துடன் வரவேண்டும் பிந்திவருவது தகைமை யீனமாக கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

# துணுக்காய் வலய பாடசாலைகளில் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை

(யாழ்.நிருபர்)

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட க.பொ.த உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகளில் குறிப்பிட்ட சில பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல், பௌதிக வியல், உயிரியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லை. கலைப்பிரிவிலும் சில பாடங்களைக் கற்பிப்பதற்கு தேவையான கலைப்பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை.

கற்சிலைமடு மகா வித்தியாலயம் பாலிநகர் மகாவித்தியாலயம்,யோகபுரம் மகாவித்தியாலயம் முத்தையன்கட்டு வலதுகரை மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் க.பொ.த உயர்தர கலைப்பிரிவில் தமிழ்,வரலாறு புவியியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர் இன்மையால் கீழ்வகுப்புகளில் வேறு பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களின் துணையுடன் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (10)

# வெங்காய விலைத் தளம்பலைத் தடுக்க களஞ்சியசாலை அமைக்க நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் வெங்காய விலையில் தளம்பல் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், அவற்றைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியசாலை ஒன்றை அமைக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, களஞ்சியசாலையை அமைப்பதற்கான அனுமதியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளதை அடுத்து களஞ்சியசாலையை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

குடாநாட்டில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தற்பொழுது வெங்காயச் செய்கை பெருமளவில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்படலாமெனவும், எனவே, இதற்கு தீர்வினைக் காணும் வகையில் களஞ்சிய வசதியை ஏற்படுத்தி விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென பல்வேறு விவசாய அமைப்புகளும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ஜனாதிபதியிடம் கலந்துரையாடியதை அடுத்து விவசாயிகளின் நன்மை கருதி களஞ்சியசாலை ஒன்றை அமைப்பதற்கான அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இதேவேளை, விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக் கொள்வனவு செய்யும் வகையில் விவசாய அமைப்புகள் இணைந்து ஒரு அமைப்பை உருவாக்கவுள்ளதாகவும், இந்தக் கொள்வனவிற்கு அரசு நிதியுதவியை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வலைப்பாட்டில் படகு கவிழ்ந்து இரண்டு மீனவர்கள் மரணம்



(பூநகரி)

வலைப்பாட்டில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் கடற்கொந்தளிப்புக் காரணமாகப் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான (வயது 24) ஞானமுத்து ஜெயதாஸன் மற்றும் ஒரு பிள்ளையின் தந்தையான (வயது 22) செபமாலை ஜெயதாஸ் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆவர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: கடந்த சனிக்கிழமை பகல் 12 மணியளவில் கடற்றொழிலுக்காக மூன்று பேர் ஒரு படகில் சென்றனர். சுமார் இரண்டு மணியளவில் கடற்கொந் தளிப்பு மற்றும் கடுமையான காற்று வீசியதன் காரணமாக இவர்கள் பயணித்த படகு கவிழ்நதது. இதனையடுத்து கரைசேர்வதற்காக மூன்று பேரும் கடலில் நீந்திய போதும் ஒருவர் மட்டுமே கரைசேர்ந்தார். ஏனைய இருவரையும் தேடும் நடவடிக்கையில் ஈடு பட்ட மீனவர்கள், கடந்த செவ்வாய்க்கிழமை காலை இவர்கள் இருவரின் சடலங்களையும் பள்ளிக்குடா கடற்பகுதியில் கண்டு பிடித்தனர்.

# பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுகாதார அமைச்சினால் Prosthetics and Orthotics பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான கல்வித் தகைமையாக க.பொ.த. சாதாரண தரம் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட இரு அமர்வுகளிற்கு மேற்படாது ஆறு திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

இதில் சிங்களத்தில் திறமைச் சித்திகள் பெற்றிருப்பவர்கள் மட்டுமல்லாது தமிழில் திறமைச் சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும் எனச் சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் பௌதிகம் அல்லது உயிரியல் உட்பட மூன்று திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும். இதில் விசேட தேவைப்பட்டோருக்கும் பெண்களிற்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக Director (Education Trainig & research) Ministry of health "Suwasiripaya" 382 Rev Baddegama Wimalawansa Thero Mawatha Colombo - 01 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனச் சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் 4,35,557 பேர் வாக்களிக்கத் தகுதி

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் மூன்று இலட்சத்து 74 ஆயிரத்து 340 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 61 ஆயிரத்து 217 பேருமாக மொத்தம் நான்கு இலட்சத்து 35 ஆயிரத்து 557 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய மூன்று நகர சபைகளுக்கும் 23 ஆயிரத்து 913 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன், 13 பிரதேச சபைகளுக்கும் மூன்று இலட்சத்து 50 ஆயிரத்து 427 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மக்கள் வாக்களிப்பதற்கென 554 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 60 வாக்குகள் எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 41 சாதாரண வாக்கெடுப்பு நிலையங்களும், 19 தபால் மூல வாக்கெடுப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளுக்காக ஐந்து ஆயிரத்து 201 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் வெளி மாவட்டங்களிலிருந்து 373 பேரும், யாழ். மாவட்டத்திலிருந்து நான்கு ஆயிரத்து 828 பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்பில் நான்கு ஆயிரத்து 902 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் கடந்த 19ஆம் திகதி பிற்பகல் 6.00 மணி வரை நான்கு ஆயிரத்து 514 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக 19ஆம் திகதி வரை 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

தேர்தல் கடமைகளுக்காக இலங்கை போக்குவரத்து பேருந்துகள் 70ஆம் 80 தனியார் பேருந்துகளுமாக 150 பேருந்துகள் சேவையில் ஈடுபடவுள்ளது.



தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஏழு கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களுமாக ஒன்பது கட்சிகள் போட்டியிடவுள்ளதுடன் 317 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு ஆயிரத்து 169 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளத[ு] அவர் மேலும் தெரிவித்தார்.

# அபராதம் விதிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட மேலதிகமான அளவு கள்ளை விற்பனை செய்த இருவர் யாழ். மதுவரித் திணைக்கள பரிசோதகர்களினால் பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ. ஆனந்தராஜா குறித்த இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் தண்டப் பணத்தை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தணடனையை அனுபவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (எஸ்)



இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரியும் வகையில் வாக்களிப்பு பெட்டிகளுடன் அதிகாரிகள் செல்வதைக் காணலாம். (படம் : சுமித்தி)

# சமாதான நீதவான் நியமனம்



(யாழ்ப்பாணம்)

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஐயாத்துரை ஜெகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஓய்வுபெற்ற யாழ். கல்வித் திணைக்கள சேவைக்கால விஞ்ஞான பாட கல்வி ஆலோசகர் ஆவார்.

அத்துடன் யுனிசெவ் அமைப்பினால் அமுல்படுத்தப்பட்டு நடாத்தப்பட்ட மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டினை யாழ்ப்பாண கல்விச் சமூகத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு நடாத்தியவராவார். இவர் தற்போது வலி கிழக்கு பிரதேச அரச சேவையாளர் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் பொருளாளராகவும், அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினராகவும் மட்டுவில் கல்லுவம் விநாயகர் ஆலய தர்மகத்தவாகவும் செயற்பட்டு வருகிறார்.

# அபிவிருத்தி பணிகளை துரித கதியில் செயற்படுத்துமாறு அமைச்சு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் யாவும் துரித கதியில் செயற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என அமைச்சினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகளை முன்கொண்டு செயற்படுத்துவதற்கு அரசாங்க அதிகாரிகள் துரித சேவையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சு பணித்துள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிக்கென ஒதுக்கப்பட்ட நிதியை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிக்கு தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் வேறு மாவட்டங்களில் இருந்து அவர்களை அழைத்து வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வி)

# கணிப்பீட்டு மீளாய்வு செயலமர்வு

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 10, 11, 12, 13இற்கான கணிப்பீட்டு படிவ விநியோகமும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு மீளாய்வுச் செயலமர்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக யாழ். கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில் அப்பாடசாலை அதிபரும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு இணைப்பாளரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான பல விடயங்கள் இச்செயலமர்வின்போது கலந்துரையாடப்பட இருப்பதால் உரியவர்கள் வரவு முக்கியமானதாக கருதப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# தேசிய நேர்மைத்திறன் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான தேசிய நேர்மைத்திறன் விருது வழங்குவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் ஊழல் ஒழிப்புதினம் டிசம்பர் ஒன்பதாம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனை முன்னிட்டே இந்த விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஊழலை ஒழிக்கவும் நல்லாட்சியை மேம்படுத்தவும் போராடிக் கொண்டிருக்கும் தனிநபர்களினதும் நிறுவனங்களினதும் தைரியத்தையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிக்கும் முகமாக இந்த விருது வழங்கப்படுகிறது.

அரச, தனியார், ஊடகம், சமூகசேவை, வர்த்தகம் ஆகிய துறைசார்ந்த நபர்களிடமிருந்தும் ஸ்தாபனங்களிலிருந்தும் பெண்கள் மற்றும் இளைஞர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பங்களுக்காக இறுதி நாள் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

டிரான்ஸ்பேரன்சி இன்டநஷனல் சிறிலங்கா, 6,37 ஆவது லேன், குவின்ஸ் வீதி, கொழுமபு -3 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

மேலதிக தகவல்களுக்கு திருமதி நவுலி விமல்ரட்ன என்பவரின் 0115627432 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# அகில இலங்கை சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன

(யாழ்.நகர் நிருபர்)

கொழும்பு தமிழ்ச்சங்க இலக்கியக்குழுவும் இலங்கையர்கோன் சிறுகதைப் பரிசில் நிதியமும், அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

கொழும்பு - 12 ஐச் சேர்நத எஸ.ஜ.நாகூர்கனி எழுதிய 'இவர்கள் மனிதர்கள்' என்ற சிறுகதை முதலாமிடம் பெற்றுள்ளது. அளவெட்டி மத்தியைச் சேர்ந்த வேலாயுதம் சிவராஜா எழுதிய "சுகமாக அழவேண்டும்" என்ற சிறுகதை இரண்டாமிடத்தையும், கொழும்பு -5 சோ.இராமேஸ்வரன் எழுதிய 'வண்ணி மாப்பிளளை' என்ற சிறுகதை மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

முதல் மூன்று சிறுகதைகளுக்கும் முறையே 15,000 ரூபா, 10.000 ரூபா, 5000 ரூபா பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இச்சிறுகதைப் போட்டிக்கு நாடெங்கிலுமிருந்து 360 சிறுகதைகள் கிடைக்கப் பெற்றதாகவும், இவை மூன்று சுற்றுக்களாகப் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் வெற்றிபெற்ற சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மு.கதிர்காமநாதன் தெரிவித்தார். (10)


# இந்துமத அடையாளங்களைப் பின்பற்றுமாறு நல்லைக் குருமுதல்வர் வேண்டுகோள்விடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு மதத்தவரும் தமது மத அடையாளங்களைப் பின்பற்றுவது போல நாமும் எமது மத அடையாளங்களைப் பேணிப் பின்பற்ற வேண்டுமென நல்லைக் குருமுதல்வர் திருஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் உற்சவ கால ஒழுங்குகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் மாலை யாழ் மாநகர சபை மகாநாட்டு மண்டபததில் மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே குருமுதல்வர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் கடந்த வருடத்தைப் போன்று இம்முறையும் வீதித்தடையினுள் செல்லும் பக்தர்கள் பாதணிகளுடன் செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும், சுவாமி வீதியுலா வரும்வேளையில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டதுடன், இது தொடர்பாக மாநகரசபை அதிகாரி கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (26)



கிளிநொச்சி இரணைமடுவில் உள்ள ஓடுதளத்தில் இலங்கை விமானப்படையின் அன்ரனோவ் 12 ரகவிமானம் கடந்த செவ்வாய்க்கிழமை 11.30 மணிக்கு முதல்முறையாக தரை இறங்கி நிற்பதையும் விமானப்படைத் தளபதி ஏயார்மார்சல் ஹர்ச அபயவிக்கிரம உட்பட அதிகாரிகள் நிற்பதனையும் காணலாம்.

# வலயமட்ட விஞ்ஞான வினாவிடை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய மட்ட விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வலயத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**அங்கில மொழிமூலம்**

**தரம் - 6**

ஜெ.ஜெயதீபிகா (வேம்படி மகளிர் கல்லூரி), கே.ஜோசப் பிரவீன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.குகேசன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் - 7**

பி.கஸ்தூரி (வேம்படி மகளிர் கல்லூரி), ரி.நீல லோசன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி.துவாரகா (வேம்படி மகளிர் கல்லூரி).

**தரம் -8**

எஸ்.காருண்யன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஆர்.ஜோகினி, ஆர்.திவாகினி (வேம்படி மகளிர் கல்லூரி).

**தரம் -9**

ஆர்.கீர்த்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), டி.யூலியஸ் சரூன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.ஜனாதினி (வேம்படி மகளிர் கல்லூரி).

**தரம் -10**

ரி.ஆத்மன் (சென்.ஜோனஸ் கல்லூரி), எஸ்.பவனா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆர்.அச்சுதன் (சென். ஜோண்ஸ் கல்லூரி).

**தரம் -11**

கே.அபிநயா, ஐ.அனோசா, சி.திலக்ஷி (வேம்படி மகளிர் கல்லூரி).

**தமிழ்மொழிமூலம்**

**தரம் - 6**

ஜெ.கிருஷிகன் (யாழ். இந்துக் கல்லூரி), எம்.சுபதா (வேம்படி மகளிர் கல்லூரி), ரி.றபிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம் - 7**

ஆர்.சாந்தரூபன் (யாழ்.மத்திய கல்லூரி), ஆர்.அபிஷா (வேம்படி மகளிர் கல்லூரி), ஏ.அன்புச்செல்வன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**தரம் -8**

ஜ.பமிதா (வேம்படி மகளிர் கல்லூரி), எம்.பவித்திரா, வை.தனுஷிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**தரம் -9**

எஸ்.லக்ஷிகா, கே.கஜலக்ஷி (வேம்படி மகளிர் கல்லூரி), எல்.சுபாகரன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் -10**

எம்.பவித்ரா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.பொன்மாறன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), ஜி.திரிஷிகன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் -11**

எஸ்.தர்ஷிகா, கே.சுபேகா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெ.லோகபன் (யாழ். இந்துக் கல்லூரி). (03)

# இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் ஆளுமை விருத்தியை ஏற்படுத்த வேண்டும்

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்.நிருபர்)

மாணவர்களிடம் இலைமறைகாயாக மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்துவதற்குப் பாடசாலைகள் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வன்னிப் பிரதேசத்து மாணவர்கள் பல்வேறு கஷ்ரங்களுக்கும் மத்தியில் தமது கல்வியைத் தொடர்கிறார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும் தமது திறமைகள், ஆற்றல்களை வெளிப்படுத்த அதிபர், ஆசிரியர்கள் வழிப்படுத்த வேண்டும் என்று துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்தார்.

பாலிநகர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நவோதய பாடசாலை வார நிகழ்வின்போது பாடசாலையின் பெயாப் பலகையைத் திரைநீக்கம் செயது வைத்து உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைக்கு விசுவாசமாகச் செயற்பட வேண்டும். பகுத்தறிவுள்ள மனிதர்களாகிய நாம் மற்றவர்களுடன் அன்புடன் பழகுவதன் மூலம் சமூக மேம்பாட்டிற்கு உதவ முடியும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் மாணவரிடையே தலைமைத்துவப் பணபு, ஆளுமை விருத்தி போன்ற வற்றை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் அவர்களின் எதிர்காலத் தொழில் வழிகாட்டலுக்கு உதவ முடியும் எனக் குறிப்பிட்டார்.

நவோதயப் பாடசாலை வார நிகழ்வுகளின்போது சிரமதானம், கண்காட்சி, கணித விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜயபாலா, வலய நூலக இணைப்பாளர் மா.தேவகாந்தன் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (10)

# தென்னங் கன்றுகள் மீள் நடுகை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி பளைப் பகுதியில் தென்னங்கன்றுகளை மீள்நடுகை செய்வதில் பலர் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் மேற்படி பிரதேசத்தில் பெருமளவு தென்னங்கன்றுகள் அழிவடைந்தன.

இந்நிலையில் தெற்கின் வளத்தினை அதிகரிக்கும் நோக்குடன் அரசினாலும், தனியாரினாலும் மீளக்குடியமர்ந்த மக்களினாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் தென்னங்கன்றுகள் நடுகை செய்யும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. (121)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(23.07.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 7 ஆம் நாள்.

இராகுகாலம் 09.02–10.32, சுபநேரம் 3.02 –4.32,

நட்சத்திரம் அச்சுவினி பி.இ 1.06 வரை

திதி: அட்டமி மு.இ 10.50 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, அதிகாரப் போட்டி, காரிய சித்தி, பணவரவு, உறவுக்குள் பகை.

**ரிஷபம:–** காரியத்தடை, குடும்பத்தில் கவலை, கடன் வசூல், பணவரவு, திடீர் பயணம்.

**மிதுனம் :–** அதிகாரப் போட்டி, தேகநலம் பாதிப்பு, பணக்கஷ்டம், தெரு விபத்து, நண்பர் தொல்லை.

**கடகம்:–** பணக்கஷ்டம், உடல்நலக் குறைவு, குடும்பத்தில் சலனம், அதிகாரப் போட்டி, மனக் கவலை.

**சிம்மம்:–** பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் நிம்மதி, தொழிலில் ஆதாயம், கடவுள் வழிபாடு.

**கன்னி :–** பணக்கஷ்டம், உடல்நலம் பாதிப்பு, குடும்பத்தில் சலனம், தொழில் நஷ்டம், மனச் சஞ்சலம்.

**துலாம் :–** தேக ஆரோக்கியம், பணவரவு, கடன் வசூல், மன மகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம்.

**விருச்சிகம்:–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், தொழிலில் ஆதாயம், மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம்.

**தனுசு:–** தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தொழிலில் மேன்மை, அதிகாரப் போட்டி.

**மகரம:–** பணவரவு, தொழிலில் லாபம், நண்பர் வருகை, உறவுக்குள் பகை, தேக ஆரோக்கியம்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், உறவுகள் நன்மை, தொழில் சிக்கல், குடும்பத்தில் மகிழ்ச்சி, விபத்து வரக்கூடும்.

**மீனம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிலில் ஆதாயம், மனநிம்மதி.

# அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டுமென இந்தியா அழுத்தத்தை பிரயோகிக்கவில்லை

## அமைச்சர் டலஸ் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் அரசியல் தீர்வை காணவேண்டும் என்பது தொடர்பான விடயத்தில் இந்தியாவிடம் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என்பதனை உறுதி யாக தெரிவிக்கின்றோம். ஆனால் இலங்கையில் இந்திய எதிர்ப்புப் போக்கை விதைக்க பலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர் என்று சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**



அரசியல் தீர்வு செயற்பாட்டில் இந்தியாவின் செயற்பாடுகள் மற்றும் நகர்வுகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவிடம் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் இலங்கைக்கு பிரயோகிக்கப்படவில்லை. இந்தியா இலங்கையுடன் உயர்ந்தமட்ட உறவுகளைக் கொண்டுள்ள நாடாக உள்ளது.

ஆனால் இலங்கையில் இந்திய எதிர்ப்புப் போக்கை விதைக்க பலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். இதே சக்திகள் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் இந்திய எதிர்ப்பை உருவாக்கி நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தன

இன்று மேற்கின் சில சக்திகளினால் தூண்டப்படும் இவ்வாறான சக்திகள் இந்திய எதிர்ப்புப் போக்கை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இந்தியாவில் நெருக்கடியை ஏற்படுத்தவும் இந்திய அரசியலில் தளம்பல் நிலையை உருவாக்கவும் வேறு வெளிநாட்டு சக்திகளுக்கு தேவையேற்பட்டுள்ளது.

அந்த தேவையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கையில் உள்ள இந்திய எதிர்ப்பு சக்திகளை பயன்படுத்தி நகர்வுகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றது. எனவே இந்தியாவினால் அரசியல் தீர்வு விடயத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப் படுவதாக தெரிவிக்கப்படுவதை நாங்கள் நிராகக்கின்றோம்.

ஆனால் இந்தியாவின் எம்முடனான தொடர்புகள் தவிர்க்கப்பட முடியாதவையாகும். இந்தியா மிக அருகில் உள்ள நாடு. இந்தியாவில் 65 மில்லியன் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். எமது கலாசார விவகாரங்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட நாடாக அந்நாடு திகழ்கின்றது.

அத்துடன் தமிழகத்தினால் முன்வைக்கப்படும் நெருக்குதல்கள் மத்திய அரசாங்கத்தில் தாக்கத்தை செலுத்தும். எனினும் தென்னிந்தியாவில் பாரிய எதிர்ப்புக்கள் இருந்த நிலையில்தான் இந்திய மத்திய அரசாங்கம் யுத்த நடவடிக்கையின்போது எங்களுக்கு உதவிகளை வழங்கியது. எனவே நாம் இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றார்.

# ரத்மலானை - கிளிநொச்சி விமானசேவை ஆரம்பம்

(கொழும்பு)

ரத்மலானையில் இருந்து கிளிநொச்சி வரையிலான விமானசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வாராந்தம் வியாழக்கிழமைகளில் இந்த சேவை நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை விமானப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

என விமானப்படைப் பேச்சாளர் என்டி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் விமான ஓடுபாதை, புனரமைக்கப்பட்டு, அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விமானத் தளத்துக்கும், ரத்மலானை விமானத் தளத்துக்கும் இடையில உள்ளூர் பயணிகள் விமான சேவையை ஒழுங்கு செய்துள்ளதாக அவர் குறிப்பிடுள்ளார்.

# வன்முறைகளைத் தவிர்க்கும் வகையில் மதியத்திற்கு முன்னர் வாக்கை அளியுங்கள்

## வாக்காளரை அறிவுறுத்துகிறது கபே




(கொழும்பு)

நாடு பூராகவும் 65 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ளது. வாக்காளர்கள் அனைவரையும் இயன்றளவு மதியத்துக்கு முன்னரேயே சென்று வாக்களிக்குமாறு கபே அமைப்பு கேட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

வாக்காளர் அனைவரும் மதியத்துக்கு முன்னரேயே வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதன் மூலம் வாக்காளர்களுக்கும் வாக்களிப்பு நிலையங்களிலுள்ள அதிகாரிகளுக்கும் இப்பணி இலகுவாக அமையும். தவிர மதியத்துக்குப் பின்னர் முறைகேடுகள் இடம்பெறுதல் உள்ளிட்ட அசம்பாவிதங்களையும் இதன் மூலம் இயன்றளவு தவிர்த்துக்கொள்ள முடியும்.

வட பகுதியில் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட கபே அமைப்பின் சுமார் 250 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாக்களிப்பு நிலையங்களில் கண்காணிப்பில் ஈடுபடுவர் என்று கபே அமைப்பு கூறி உள்ளது.

இதேவேளை,கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கென வாக்காளர்களுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இதனால் அங்குள்ள வாக்காளர்கள் தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதில் போக்கு வரத்து இடையூறுகளை எதிர்கொள்ளவுள்ளனர். அங்குள்ள சில பிரதேசங்களில் போக்கு வரத்து வசதிகள் போதாமலுள்ளன. சில பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகள் இன்னும் ஏற்படுத்தப் படவில்லை. சாதாரண டிராக்டர் வண்டிகள் கூட ஏற்பாடு செய்யப்படவில்லை.நகரில் இருந்து 17 கி.மீற்றர்களுக்கும் அப்பாலிருக்கும் மக்கள் இந்தச்சிக்கலுக்குள்ளாகியுள்ளனர்.

# காலனித்துவ நாடுகளின் சதித்திட்டங்களை அனைவரும் புரிந்து செயற்பட வேண்டும்

## அமைச்சர் பசில் கூறுகிறார்

(கொழும்பு)



காலனித்துவ நாடுகளின் சதித் திட்டங்களை புரிந்துகொள்ள வேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பென்தர எல்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய நாடொன்று அபிவிருத்தி அடைவதனை காலனித்துவ நாடுகள் ஏற்றுக் கொள்ளாது என அவர் தெரிவித்துள்ளார். ஏதேனும் ஓர் வழியில் சிறிய நாட்டுக்குள் புகுந்து அபிவிருத்தியை சீர்குலைக்க காலனித்துவ நாடுகள் முயற்சிக்கும்.

வியட்நாம் நாடு இந்த துர்ப்பாக்கிய நிலைமையை எதிர்நோக்கியது ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கிலும் இதே நிலைமை ஏற்பட்டது லிபியா இந்த சதித் திட்டத்தினை தற்போது எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே, இதனை புதிதாக நோக்கவேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த சதித் திட்டங்களுக்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யுத்தக் குற்றங்களுடன் தொடர்புடைய இலங்கையர் இருவர் கனடாவில் உள்ளனர்

(கொழும்பு)

கனடாவில் வாழும் யுத்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களின் பட்டியலில் இரண்டு இலங்கையர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜெரோம் பெர்னாண்டோ(Jerome Fernando) மற்றும் குலதுங்க இளந்தாரி தேவகே (Kulatunga Illandaridevage) ஆகிய இலங்கையர்கள் யுத்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு கனடாவில் வாழ சந்தர்ப்பம் அளிக்கப்பட மாட்டாது என அந்நாட்டு எல்லை முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிச் செயற்படும் வெளிநாட்டுப் பிரஜைகள் கனடாவிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

யுத்தக் குற்றவாளிகள் அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் 30 பேர் பற்றிய தகவல்களை கன்டா வெளியிட்டுள்ளது.

இந்த நபர்களை கைது செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களின் பெயர் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட விசேட இணையதளமொன்றை கனேடிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. நாடு கடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நபர்களே அதிகளவில் இவ்வாறு தலைமறைவாக வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# அரசு - கூட்டமைப்பு பேச்சிற்கான ரணிலின் ஆதரவு வரவேற்கத்தக்கது

## என்கிறார் அமைச்சர் நிமால்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என அரசாங்கம் புகழாரம் சூட்டியுள்ளது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைபபிற்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளுக்கு ரணில் விக்ரமசிங்க ஆதரவு தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏனைய கடும்போக்குடைய கட்சிகளைப் போன்று ரணில் விக்ரமசிங்க இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு தடை ஏற்படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். நீண்டகாலமாக நிலவி வரும் பிரச்சினைக்கு தீர்வுகாண ரணில் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எட்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கு ரணிலுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வன்முறைகளற்ற தேர்தல் ஒன்றை நடாத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கட்சிகளுக்கு இடையேயும், கட்சிக்கு உள்ளேயும் இவ்வாறான மோதல் சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு தேர்தல் வன்முறைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## காங்கேசன் துறைமுக முதல்கட்ட அபிவிருத்திக்கு இந்தியா 20 மில்லியன் டொலர் உதவி

(கொழும்பு)

**காங்கேசன்துறை துறைமுகத்தின் முதல்கட்ட அபிவிருத்திக்காக 20 மில்லியன் டொலரை வழங்கவுள்ளதாக இந்திய அரசாங்கம் நேற்று அறிவித்தது.**

தொடர்ந்தும் இந்த துறைமுக அபிவிருத்திக்காகவும் வட மாகாணத்தின் வேறு அபிவிருத்தி திட்டங்களுக்காகவும் நன்கொடைகள், சலுகைக் கடன்கள் என பல வழிகளிலும் உதவ உள்ளதாகவும் இந்தியா கூறியுள்ளது.

இது தொடர்பான ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கையும் இந்தியாவும் நேற்று கைச்சாத்திட்டுள்ளன.

துறைமுகத்தில் நீரில் மூழ்கியுள்ள ஆறு கப்பல்களை மீட்டெடுத்தல், அலைத்தடை அணையினை மறுசீரமைத்தல் போன்ற விடயங்களில் இந்தியா முதலீடு செய்யும் என இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த துறைமுக அபிவிருத்தி, இலங்கையின் புனர்நிர்மான வேலைகளை துரிதப்படுத்தி வடக்கில் வழமை நிலையை கொண்டுவரவும், பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் பங்களிப்புச் செய்யும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா கூறினார்.

காங்கேசன்துறை துறைமுகம் இரண்டு கட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படும். அபிவிருத்தி வேலை பூர்த்தியாகும்போது அத்தியாவசியமான நுகர்வுப் பொருட்களையும் வேறு உற்பத்திப் பொருட்களையும் யாழ்ப்பாணத்துக்கு கடல் மூலம் எடுத்துச் செல்ல முடியும். இதனால் இப்பிராந்தியத்தில் நுகர்வுப் பொருட்களை குறைந்த விலையில் தாராளமாக பெறக்கூடியதாக இருக்கும் என துறைமுக, பெருந்தெருக்கள் அமைச்சு அதிகாரிகள் கூறினர்.

## சிகிரிய கோட்டைக்குள் நுழையும் இரு இரகசிய வாயில்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

காசியப்ப மன்னனின் பலம் வாய்ந்த கோட்டையாக விளங்கிய சிகிரியாவுக்கு பயணிப்பதற்காக அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கிழக்கு மற்றும் வடக்கு இரகசிய வாயில்கள் இரண்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் காசியப்ப மன்னன் காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கட்டடங்களின் இடிபாடுகள், படிக்கட்டுகள் உள்ளிட்ட ஏராளமான கட்டட இடிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிகிரியா வேலைத்திட்டத்தின் முகாமையாளர் வஜிரப ர்மினென்டஸ் தெரிவித்தார்.

சிகிரியாவைச் சுற்றியுள்ள பாரிய காட்டின் சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போதே இந்த இரகசிய வாயில்கள் மற்றும் கட்டட இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## துணுக்காயில் வாக்காளர்களுக்காக விசேட பேருந்துச் சேவைகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச சபைக்கு இன்று நடைபெறுகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொது மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விசேட போக்குவரத்து ஒழுங்கு மேற்கொள்ளப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

இதற்காக 3 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை யொட்டி துணுக்காய் பிரதேச செயலகத்தில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஏ.பத்திநாதன் குறிப்பிட்டார்.

அத்துடன்,வாக்களிப்பு நடைபெறும் வேளையில் மூன்று பொலிஸ் குழுக்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஏதாவது வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றால் இராணுவத்தினரின் உதவியும் கோரப்படுமெனவும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக வினோநோகராதலிங்கமும், பிரஜைகள் முன்னணி சார்பாக ஜே.சிறீரங்காவும் முல்லைத்தீவு சிவில் நிர்வாக அதிகாரி கேணல் சிசரகுமார மற்றும் முல்லைத்தீவு உதவித் தேர்தல் ஆணையாளர் கிருஷ்ணானந்தலிங்கம், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் குணபாலன் கிராம அலுவலர்கள் ஆகியோர் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## சர்ச்சைக்குரிய நிறுவனம் டீசல் இறக்குமதி குற்றச்சாட்டை மறுக்கிறார் அமைச்சர் சுசில்



(கொழும்பு)

அரசாங்கம் டீசல் இறக்குமதி செய்யும் அதிகாரத்தை மீண்டும் சர்ச்சைக்குரிய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ள குற்றச்சாட்டை எரிபொருள் வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மறுத்துள்ளார்.

அரசாங்கம் நாட்டுக்கான டீசல் இறக்குமதி செய்யும் அதிகாரத்தை மீண்டும் சர்ச்சைக்குரிய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக, நாட்டின் போக்குவரத்து துறை மிகவும் மோசமான நிலைமையை சந்தித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குற்றச்சாட்டை நிராகரித்த அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த அவ்வாறான தீர்மானம் எதனையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை என குறிப்பிட்டார்.

அத்துன் சுத்தமற்ற பெற்றோல் குறித்த நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டது என்பதனை விசாரணை அறிக்கை வரும் வரையில் உறுதிப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

## தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்க தொலைநகல் இலக்கங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினமான இன்று முறைப்பாடுகளை மேற்கெள்வதற்காக தேர்தல் செயலகம் மூன்று விசேட தொலைநகல் இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலிருந்து 0112 877 614 என்ற இலக்கத்தினூடாகவும் குருநாகல், புத்தளம் மொனராகலை கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இருந்து 0112 877 616 என்ற இலக்கத்தினூடாகவும் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு, கம்பஹா, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 0112 877 613 என்ற தொலை நகல் இலக்கத்தினூடாக முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்வோருக்கு அடுத்த மாதம் உதவிப் பணம் வழங்கல்

(கொழும்பு)

வட மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்குரிய இந்த வருடத்திற்கான முதல் அரையாண்டிற்கான பொதுசன மாதாந்த உதவித் தொகை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான முதல் அறு மாதங்களுக்கான உதவித் தொகை வழங்கும் நடவடிக்கை ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக புத்தளம் - மன்னார் மாவட்டங்களுக்கான பிராந்திய ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மூன்று கட்டங்களில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்த இரண்டாயிரத்து 22 பேர் நன்மையடைவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இடம்பெயர்ந்து அனுராதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றவர்களுக்கான உதவித் தொகைகள் கனேவல்பொல நிலையத்தின் மூலம் வழங்கப்படவுள்ளதாக ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## பாதுகாப்பு செயலரின் பெயரைப் பயன்படுத்தி அரிசி மோசடி செய்த நபர் மாட்டினார்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரை பயன்படுத்தி, இராணுவத்திற்கு அரிசி விநியோகம் செய்வதாகக் கூறி, அரிசி வர்த்தகர்களிடம் சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான அரிசியை மோசடியாகப் பெற்றுக்கொண்ட நபர் ஒருவரை நுகேகொட பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர் மோசடியான முறையில் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 4 வாகனங்களையும் தாம் கைப்பற்றியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடுவலை பிரதேசத்தில் உள்ள ஒய்வு பெற்ற இராணுவ மேஜர் ஒருவருக்கு சொந்தமான வீடொன்றில் வைத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர் பாதுகாப்புச் செயலாளருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றை காட்டி தாம் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ள நபர் என தெரிவித்து, அரிசி வியாபாரிகளிடம் மோசடி செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பாதுகாப்புச் செயலாளரை தான் அங்கு அறிந்துள்ளவர் எனவும் அவர் ஊடாக இராணுவத்திற்கு தேவையான அரிசியை விநியோகித்து வருவதாகவும் வியாபாரிகளிடம் கூறி, கோடிக்கணக்கான பெறுமதியான அரிசியை சந்தேக நபர் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த சந்தேக நபரின் மோசடியில் சிக்கிய 11 வர்த்தர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். வேறு வர்த்தகர்கள் சந்தேக நபரின் மோசடியில் சிக்கியிருந்தால் அது குறித்து நுகேகொட பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்தேக நபர் கதிர்காமம், காலி, அனுராததபுரம், பொலனறுவை உள்ளிட்ட பல பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்களை இவ்வாறு ஏமாற்றியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## தமிழகமுதலமைச்சர் ஜெயலலிதாவை இலங்கைக்கு வருமாறு அழைப்பு

(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழக முதலமைச்சரை சென்னையில் நேற்று முன்தினம் சந்தித்தபோது தாம் இந்த அழைப்பினை விடுத்ததாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கூறினார்.

முதலமைச்சரோ அல்லது அவரின் பிரதிநிதிகளோ இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நேரடியாக இங்குள்ள நிலமைகள் குறித்து பார்வையிடுமாறு இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அழைப்பு விடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

எனவே விடயங்களை நேரில் பார்வையிட்டு நிலைமைகளை அறிந்துகொள்வதற்காக இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டதாக இந்தியாவுக்கான இலங்கை உயர் தானிகர் மேலும் சுட்டிக்காட்டனார்.

## எரியும் தன்மையுடைய வாயு கிணற்றிலிருந்து வெளியேறுகிறது

(கொழும்பு)

சிலாபம், முன்னேஸ்வ்ரம் பௌத்த விகாரையில் தண் ணீருக்காக தோண்டப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து ஒரு வகை எரி வாயு வெளியேறி வருகிறது.

முதலில் குழாய்க் கிணறு தோண்டப்பட்ட போது நீருக்குள்ளிருந்து ஒருவகை வாயு வெளியேறுவது கண்டுபிடிக்கப்பட்டது. சுலபமாக தீப்பற்றிக் கொள்ளக்கூடியதாக இந்த வாயு இருந்ததுடன் இப்பகுதியில் மற்றுமொரு குழாய்க் கிணறும் தோண்டப்பட்டது. அதிலிருந்தும் இந்த வகையான வாயு வெளியேறியது.

முதலில் மீதேன் வாயு என ஆய்வாளர்கள் குறிப்பிட்ட போதும் பின்னர் அதனை மறுத்துள்ளனர். சுமார் 200 மீற்றர் தொலைவிற்கு குழாய் மூலம் வாயுவை கொண்டு சென்று பரிசோதித்த போதும் மிக எளிதாக தீப்பற்றிக் கொண்டது.

இப்பகுதியில் மேலும் 2 குழாய்க் கிணறுகளை தோண்டி ஆய்வு செய்யும் பணியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர். விசேட குழுவொன்று இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளது

விளையாட்டுச் செய்திகள்

# பல்கலைக்கழகங்களின் தடகளப் போட்டியில் 3ஆவது முறையாக யாழ். பல்கலை சம்பியன்



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக ஆண்கள் அணி தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்தது.

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 2011ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகள் கடந்த யூலை மாதம் 16,17ஆம் திகதிகளில் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் 14 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றின. இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக ஆண்கள் அணி மிகச் சிறப்பாக தமது திறமைகளை வெளிக்காட்டி 72 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை சுவீகரித்துக் கொண்டது. இதன் மூலம் இத்தொடரில் தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் முதலாமிடத்தைப் பெற்ற ஆண்கள் அணி என்ற சிறப்பை யாழ். பல்கலைக்கழக அணி பெற்று சாதனை படைத்தது.

58 புள்ளிகளைப்ட பெற்று கொழும்பு பல்கலைக்கழக ஆண்கள் அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (12)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்.நிருபர்)

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்க சங்கானைக் கோட்டத்தைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மாளியாவத்தை ஞானவைரவர் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

சங்கானைக் குடும்ப முன்பள்ளிச் செயலாளர் திருமதி ஜெ.அஜந்தாமதி தலைமையில் 13 முன்பள்ளிச் சிறார்கள் கலந்து கொண்ட இவ்விளையாட்டு விழாவில் சங்கானை அரசினர் பிரதேச வைத்தியசாலை, மாவட்ட வைத்திய அதிகாரி ரி.பிரகாஷ், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற முன்பள்ளிச் சிறார்களுக்குப்பரிசில்களை வழங்கினர். (10)

# கைதடி சரஸ்வதி அணியை வீழ்த்தி மட்டுவில் கண்ணகை சம்பியனானது

(மட்டுவில்)

கைதடி சரஸ்வதி அணியை ஆறு நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற மட்டுவில் கண்ணகை அணி சம்பியனாகியது.

மட்டுவில் மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 56ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தென்மராட்சியில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றே மட்டுவில் கண்ணகை அணி சம்பியனாகியது. இப்போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

மேற்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கைதடி சரஸ்வதி அணியை எதிர்த்து மட்டுவில் கண்ணகை அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி சரஸ்வதி அணி 16 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை அணி 13 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் ஆட்டநாயகனாக மட்டுவில் கண்ணகை அணியைச் சேர்ந்த வினோதனும், தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த ரி. கோபிநாத்தும் தெரிவு செய்யப்பட்டனர்.



முரளி வெற்றிக்கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. முத்தையா முரளிதரனுடன் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட அணியினரைக் காணலாம். இத்தொடரில் கொழும்பு சீனிகமவில் உள்ள நல்லுறவுக்கான நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. இதில் இங்கிலாந்தின் மூன்று அணிகளும், மலேசியா, சிங்கப்பூர் நாடுகளின் ஒரு அணிகளும், சென் பற்றிக்ஸ் மற்றும் சீனிகம அணியுமாக மொத்தம் எட்டு அணிகள் இத்தொடரில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

### பதக்கப்பட்டியலில் சீனா ஆதிக்கம்

உலக நீச்சலோட்ட சாம்பியன்கஷிப் போட்டிகளில் சீனா ஏழு தங்கம், ஏழு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் அடங்கலாக, மொத்தமாக 15 பதக்கங்களை பெற்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. இதேவேளை ஐந்து தங்கப் பதக்கங்கள் உட்பட 7 மொத்தப் பதக்கங்களுடன் ரஷ்யா இரண்டாம் இடத்தினைப் பிடித்துள்ளது.

2011
THE 14th FINA WORLD CHAMPIONSHIPS 2011

# இராணுவ மகளிர் அணிக்கு வெண்கலம்

(கொழும்பு)

ஐந்தாவது உலக இராணுவ விளையாட்டு விழாவில் மகளிருக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை மகளிர் அஞ்சலோட்ட அணி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது. இதன் மூலம் இந்த விளையாட்டு விழாவில் இலங்கை தனது முதலாவது பதக்கத்தை கைப்பற்றியுள்ளது. பிரேசிலில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் இலங்கை மகளிர் அஞ்சலோட்ட அணி மூன்று நிமிடங்கள் 44.32 என்ற செக்கன்களில் போட்டித் தூரத்தினை கடந்து பதக்கத்தினை கைப்பற்றியது

# பாசையூர் சென் அன்ரனீஸ் முன்பள்ளி சிறப்புற இடம்பெற்ற விளையாட்டு விழா



(யாழ்ப்பாணம்)

பாசையூர் சென்.அன்ரனீஸ் சிறுவர் முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை பி.ப.2 மணிக்கு முன்பள்ளி அதிபர் தலைமையில், சென்.அரன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக, யாழ்.கல்வித் திணைக்களத்தின் சிறுவர் முன்பள்ளிப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி ஜெயா தம்பையாவும், சிறப்பு விருந்தினர்களாக பாசையூர் பங்குத் தந்தை அருட்தந்தை றோய் பேடினனும், கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் முகாமையாளர் செல்வி பத்மசேகரி மற்றும் பாசையூர் திருக்குடும்பக் கன்னியர்மட அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக சிறுவர்களின் வரவேற்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி இறைவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் சிறார்களுடைய வினோத உடைப் போட்டி, உடற்பயிற்சி நிகழ்வுகள், மெய்வல்லுநர் போட்டிகள், பெற்றோருடைய போட்டிகள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு விருந்தினர்கள் பரிசளித்துக் கௌரவித்தனர். (21)

# கவாஸ்கர், பிருந்தாவனின் இணைப்பாட்டம் ஸ்கந்தாவை வீழ்த்தியது சென். ஜோன்ஸ்


(யாழ்ப்பாணம்)

காவஸ்கர் - பிருந்தாவன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 19 ஓட்டங்களால் அபாரமான வெற்றிபெற்றது.


இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயது அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட போட்டியிலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் 'ஏ' அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் ஒரு சீரான இடைவெளியில் வீழ்ந்தவண்ணமிருந்தது. ஒரு கட்டத்தில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியிருந்தது. இந்நிலையில் இணைந்த காவஸ்கர், பிருந்தாவன் இணை அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் 38.1 ஓவர்கள் நிறைவில் சென் ஜோன்ஸ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. எட்டாவது விக்கெட்டுக்காக பிருந்தவன், காவஸ்கர் ஆகியோர் 81 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் பிருந்தாவன் 44, காவஸ்கர் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனுசன் மூன்று, றோய் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



பிருந்தாவன்



காவஸ்கர்

பதிலுக்கு ஆடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 43 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிதர்சன் 30, நிரோஜன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் காவஸ்கர் மூன்று, எட்வின் ஜோய், பிருந்தாவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, இத்தொடரில் ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்ற சென் ஜோன்ஸ் 'ஏ' அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ் கெய்லை தக்கவைக்க முயற்சி




(பெங்களூர்)

அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்டக்காரர் கிறிஸ் கெய்லை தமது அணியில் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகளில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ஈடுபட்டுவருகின்றது.

இம்முறை பிறிமியர் லீக் போட்டிகளின் இடைநடுவில் கிறிஸ் கெய்ல் அணிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இருப்பினும் அவர் சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு பங்களிப்பு வழங்கியதை அடுத்து பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் கிறிஸ் கெய்லை தொடர்ந்தும் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சதமடித்து அசத்தினார் இந்திய பயிற்சியாளர்



(லண்டன்)

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் டங்கன் பிளெட்சர் புதிய உலக சாதனையொன்றைப் படைத்துள்ளார். 100 டெஸ்ட் போட்டிகளில் அணிகளின் பயிற்றுநராக கடமையாற்றியமையே அவரின் இப்புதிய சாதனையாகும்.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் நேற்று லோர்ட்ஸில் ஆரம்பமான முதலாவது போட்டி டங்கன் பிளெட்சர் பயிற்றுநராக கடமையாற்றும் 100 ஆவது டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

62 வயதான டங்கன் பிளெட்சர் சிம்பாப்வேயில் பிறந்தவர். 1999 ஆம் ஆண்டு அவர் இங்கிலாந்து அணியின் முதல் வெளிநாட்டு பயிற்றுநராக பதவியேற்றார்.

8 வருடகாலம் அவர் இங்கிலாந்து அணியின் பயிற்றுநராக கடமையாற்றினார். 2005 ஆம் ஆண்டு ஆ'ஸ் தொடரில் இங்கிலாந்து அணி சம்பியனாகியபோது டங்கன் பிளெட்சரின் புகழும் உயர்ந்தது.

அவர் பயிற்றுநராக பணியாற்றிய காலத்தில் இலங்கை அணியை இங்கிலாந்து அணி டெஸ்ட் தொடரில் தோற்கடித்ததுடன், நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள்அணிகளையும் வெற்றிகொண்டிருந்தது.

இங்கிலாந்து அணியின் 96 டெஸ்ட் போட்டிகளின்போது பயிற்றுநராக விளங்கிய அவர் கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின்பின் இந்திய அணியின் பயிற்றுநராக பதவியேற்றார்.

அதன்பின் மேற்கிந்தியத் தீவுகளில் 3 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி பங்குபற்றியது. இப்போது லோர்ட்ஸில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டியானது பிளெட்சர் பயிற்றுநராக பணியாற்றும் 100 ஆவது போட்டியாகும்.

இப்போட்டி இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் வரலாற்றின் 100 ஆவது போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரவி சாஸ்திரிக்கு அழைப்பாணை

(மும்பை)

ஐ.பி.எல். நிதி முறைகேடு தொடர்பாக முன்னாள் கிரிக்கெட் வீரரும், ஐ.பி.எல். நிர்வாகக் குழு உறுப்பினருமான ரவி சாஸ்திரிக்கு அமுலாக்கப் பிரிவு இயக்குநரகம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அவரை அடுத்த வாரம் மும்பையில் உள்ள தங்கள் அலுவலகத்தில் ஆஜராகுமாறு அமுலாக்கப் பிரிவு இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

அவர் இப்போது வெளிநாட்டில் உள்ளார். ஐ.பி.எல். முறைகேடு தொடர்பான வழக்கில் விசாரணை நடத்தி வரும் தங்களுக்கு உதவும் வகையில் ஐ.பி.எல். போட்டி தொடர்பான சில கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு அவரை அமுலாக்கப் பிரிவு இயக்குநரகம் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

ஐ.பி.எல். முன்னாள் ஆணையரான லலித் மோடி, ஐபிஎல் அணி உரிமையாளர்கள் ஆகியோர் அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டத்தை மீறியது தொடர்பாகவும் அமுலாக்கப் பிரிவு இயக்குநரகம் விசாரணை நடத்தி வருகிறது

## ரூனியின் ஹட்ரிக் கோலால் மன்செஸ்டர் யுனைட்டட் வெற்றி

வெய்னி ரூனி அடித்த ஹாட்ரிக் கோலால் மான்செஸ்டர் யுனைடெட் அணி 7-0 கோல் கணக்கில் அமெரிக்காவின் சியாட்டில் சவுண்டர்ஸ் அணியை தோற்கடித்தது.

இந்த ஆட்டம் நட்பு ரீதியிலான ஆட்டம் தான் , இருந்தாலும் அடுத்தடுத்து ரூனி அடித்த 3 கோல்கள் அமெரிக்க ரசிகர்களை மட்டுமல்ல எதிரணி வீரர்களையும் திக்குமுக்காடச் செய்தது.

பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டி தொடங்க இன்னும் 3 வாரம் உள்ள நிலையில், மான்செஸ்டர் யுனைடெட் அணி அமெரிக்காவில் பயிற்சி ஆட்டங்களை ஆடுகிறது. அந்த அணி சிகாகோ, நியூ ஜெர்சி, வாஷிங்டன் நகரங்களுக்கும் பயணிக்க உள்ளது. பெர்குசனின் மான்செஸ்டர் யுனைடெட் ஆட்டத்தை மைதானத்தில் இருந்த 67 ஆயிரம் ரசிகர்கள் பாராட்டினர். அந்த ரசிகர்களை ஏமாற்றாத வகையில் ஆட்டத்தின் 2 வது பாதியில் களம் இறங்கிய வெய்னி ரூனி 18 நிமிட நேரத்தில் 3 கோல்கள் அடித்தார்.

## டேமியன் ரைட் நியமனம்

(ஹமில்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் புதிய பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக அவுஸ்ரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் டேமியன் ரைட் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் தெரிவுசெய்யப்பட்டுள்ள இறுதிப்பட்டியலில் இவரின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் நியூசிலாந்துக் கிரிக்கெட் அணியில் மாற்றங்கள் ஏற்படுத்துவது குறித்து பலரும் கவனம் செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கோபா அமெரிக்க கால்பந்து இறுதிப் போட்டியில் பராகுவே



(மென்டோசா)

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு, பராகுவே அணி முன்னேறியது.


அர்ஜென்டீனாவில், ஆண்களுக்கான கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதியில் பராகுவே, வெனிசுலா அணிகள் மோதின.

விறுவிறுப்பான இப்போட்டி, ஆட்ட நேர முடிவில் கோல் எதுவுமின்றி சமநிலை வகித்தது. பின், இரு அணிகளுக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதிலும் இரு அணி வீரர்கள் ஏமாற்ற, ஆட்டத்தின் முடிவு தண்ட உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதில் அபாரமாக செயற்பட்ட பராகுவே அணி, 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, எட்டாவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. முன்னதாக 1953, 79இல் சம்பியன் பட்டம் வென்ற பராகுவே அணி, 1922, 29, 47, 49, 63ஆம் ஆண்டில் இரணடாவது இடம் பிடித்தது.

தொடரின் இறுதிப் போட்டி வரும் நாளை நடக்கவுள்ளது. இதில் பராகுவே, உருகுவே அணிகள் மோதுகின்றன. இன்று நடக்கவுள்ள மூன்றாவது இடத்துக்கான போட்டியில், பெரு, வெனிசுலா அணிகள் பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.

## சிறப்பு வாய்ப்பைப் பயன்படுத்தும் செரீனா அமெரிக்க ஓப்பனில் களமிறங்குகின்றார்



(நியூயோர்க்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டி அடுத்த மாதம் 29-ந்தேதி நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டியில் மகளிர் ஒற்றையரில் மொத்தம் 128 பேர் பங்கேற்பார்கள். இதில் தரவரிசையில் முதல் 105 இடம் வகிப்பவர்கள் மட்டுமே நேரடியாக பங்கேற்க முடியும். மற்றவர்கள் தகுதிச் சுற்று மற்றும் வைல்ட் கார்ட் மூலம் வாய்ப்பு பெறுவார்கள்.

13 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான முன்னாள் முதல் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், தற்போது தரவரிசையில் 172ஆவது இடத்தில் உள்ளார். இதனால் அவர் அமெரிக்க ஓப்பனில் நேரடியாக பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது. அவர் காயம் மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த ஓராண்டாக எந்தப் போட்டிகளிலும் பங்கேற்காததால் அவருக்கு தரவரிசையில் இவ்வளவு பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் டென்னிஸிற்குத் திரும்பிய அவர் விம்பிள்டன் போட்டியில் சோபிக்கவில்லை.

6 அல்லது அதற்கு மேல் காயத்தால் விலகி இருக்கும் போது தரவரிசையில் காயத்தை காரணம் காட்டி சிறப்பு அனுமதியுடன் ஒரு கிராண்ட்ஸ்லாம் உட்பட 8 போட்டிகளில் நேரடியாக பங்கேற்க முடியும். இந்த சிறப்பு வாய்ப்பை பயன்படுத்தி செரீனா வில்லியம்ஸ் அமெரிக்க ஓப்பனில் நேரடியாக பிரதான சுற்றில் விளையாட இருக்கிறார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த செரீனா: காயம் காரணமாகவே போட்டிகளில் விளையாட முடியாமல் போனது. தெரிவுப் போட்டிகளில் வென்று வரும் நிலை ஏற்பட்டபோதும், இந்த சிறப்பு வாய்ப்பை வழங்கியதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அமெரிக்க ஓப்பனில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்துவேன் என்றார்.

## கென்ய அணிக்கு புதிய தலைவர்

கென்ய கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக 29 வயதான கொலிங்ஸ் ஒபூயோ நியமிக் கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் கென்ய அணி சிறப்பாக செயற்படாததை அடுத்து தலைவர் பதவியில் இருந்து ஜிம்மி காமாண்டே நீக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக நியூசிலாந்தின் மைக் ஹிசன் நியமிக்கப்பட்டு, ஒரு நாள் கடந்துள்ள நிலையில், புதிய அணித் தலைவர் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் கொலிங்ஸ் ஒபூயோ ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

தேசிய அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டது மகிழ்ச்சியான விடயம். இதனை பெரும் கௌரவமாகவே கொள்கின்றேன். அணியை சிறப்பான முறையில் வழி நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை ஓரளவேனும் நிறைவு செய்வேன் என கொலிங்ஸ் ஒபூயோ தெரிவித்தார்.

# குன்னூர் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் இலங்கை இராணுவ அதிகாரிகள்

(குன்னூர்)
குன்னூரில் உள்ள, இராணுவ பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகள், குன்னூரில் உள்ள தனியார் விடுதியொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியச் செய்திகள்


இவர்களது வருகை, இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள, வெலிங்டன் எம்.ஆர்.சி. இராணுவப் பயிற்சிமையம் அருகே இராணுவ பயிற்சிக் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியில், இந்தியா மட்டு மல்லாமல் பாகிஸ்தான், இலங்கை, ஜப்பான், சீனா என பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள், அவ்வப்போது வந்து சுழற்சி முறையில் பயிற்சி பெற்றுச் செல்வது வழக்கம்.

இந்நிலையில், இலங்கையைச் சேர்ந்த, 25 முக்கிய இராணுவ அதிகாரிகள் நேற்றுமுன் தினம் குன்னூர் வெலிங்டன் அருகே உள்ள தனியார் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், இராணுவ பயிற்சிக் கல்லூரியில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்துள்ளதாக கூறப்படுகிறது. என்ன நிகழ்ச்சி என்பது போன்ற விவரங்களை தெரிவிக்க, அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இவர்கள் தங்கியுள்ள விடுதியைச் சுற்றி, 20 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வருகை குறித்து செய்தி சேகரிப்பதற்கும், புகைப்படம் எடுப்பதற்கும் விடுதி நிர்வாகம் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# குறுகிய தூர ஏவுகணையை பரிசோதித்தது இந்தியா




(சென்னை)
ரஹார் என்ற புதிய குறுகிய தூர ஏவுகணையை நேற்றுமுன் தினம் இந்தியா ஏவி பரிசோதித்தது.

ஒரிசாவின் சந்திப்பூரில் இந்த பரிசோதனை நடைபெற்றது. 150 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கக் கூடியது பிரஹார் ஏவுகணையாகும். ஒரே லோஞ்சர் மூலம் 6 பிரஹார் ஏவுகணைகளை ஏவமுடியும். மேலும் ஒரே நேரத்தில் பல்வேறு இலக்குகளை தாக்கவும் இந்த பிரஹார் ஏவுகணை உதவும்.

பாகிஸ்தானிடம் உள்ள குறுகிய தொலைவு ஏவுகணையான நாசருக்குப் போட்டியாக தற்போது பிரஹாரை உருவாக்கியுள்ளது இந்தியா. சாலை மார்க்கமாகவே எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதுடன் மேலும் விரைவாக இதைக் கையாளவும் முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மம்முட்டி, மோகன்லால் வீடுகளில் வருமான வரியினர் அதிரடிச் சோதனை



(சென்னை)
மலையாள முன்னணி நடிகர்களின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தியுள்ளனர்.

மலையாள நடிகர்கள் மம்முட்டி, மோகன்லால் ஆகியோரின் வீடு மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று அதிரடிச் சோதனை நடத்தினர்.

சென்னையில் உள்ள நடிகர் மம்முட்டியின் வீடு, அலுவலகங்கள், இதேபோல் கொச்சி, பெங்களூரில் உள்ள வீடு, அலுவலகங்களில் இந்தச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இதேபோல் மற்றொரு மலையாள நடிகர் மோகன் லாலின் சென்னை, பெங்களூர், கொச்சி ஆகிய இடங்களில் உள்ள வீடு, அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்றுக் காலை முதலே சோதனை மேற்கொண்டுள்ளனர்.

பிரபல நடிகர்களின் வீடு, அலுவலகங்களில் வருமானவரித்துறையினர் சோதனை நடத்தி வருகிறது. இது தமிழ் திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இராணுவத் தளபதி பிறந்த வருட குழப்பநிலை தீர்க்கப்பட்டது

(புதுடில்லி)
இராணுவத் தளபதி வி.கே.சிங், பிறந்த திகதியில் நிலவி வந்த குழப்பம் தீர்க்கப்பட்டுள்ளதால், அவர், அடுத்த ஆண்டு மே மாதம் ஓய்வு பெறுகிறார்.

இராணுவத் தளபதி வி.கே. சிங் கின் கல்விச் சான்றிதழில், அவர் பிறந்த திகதி 10.6.1951 என்று உள்ளது. ஆனால், அவர் விண்ணப்பித்த யு.பி.எஸ்.சி., படிவத்தில் 10.6.1950 என்று உள்ளது.

இந்தத் திகதிகளால் குழப்பம் ஏற்பட்டதால், அவர் ஓய்வு பெறுவதை, முடிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.

சட்டத்துறை அமைச்சகம் மற்றும் இராணுவத் தளபதியின் பரிந்துரையை ஏற்ற இராணுவ அமைச்சகம், அவர் பிறந்த திகதியை 10.6.1950 என, அங்கீகரித்து அடுத்த ஆண்டு மே மாதம் அவருது 62 ஆவது வயதில் அவருக்கு ஓய்வளிக்க முடிவு செய்துள்ளது. இதன் மூலம், அவர் பிறந்த திகதியில் ஏற்பட்ட குழப்பம் நீங்கியுள்ளது.

# 108 இரட்டையர்களுடன் இந்தியாவின் உம்ரி கிராமம்

## கின்னஸில் பதியவும் ஏற்பாடு

(புதுடில்லி)
கடந்த 50 ஆண்டுகளில் 108 இற்கும் மேற்பட்ட இரட்டையர்கள் பிறந்ததினால் வியப்படைய வைத்துள்ளது உத்தரப் பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள அலகாபாத் அருகேயுள்ள உம்ரி என்ற கிராமம்.

இரட்டைக் குழந்தைகள் பிறப்பது மிகவும் அரிதாக நடக்கின்ற ஒரு விடயம்.

ஆனால் இக்கிராமத்தில் 108இற்கும் மேற்பட்ட இரட்டையர்கள் பிறந்தது மட்டுமலலாது இக்கிராமத்தில் உள்ள விலங்கினங்களும் இரட்டைக் குட்டிகளை ஈன்றெடுக்கின்றன.

இந்தியாவின் கைதராபாத், புதுடில்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பை போன்ற முக்கிய நகரங்களில் இருந்து விஞ்ஞானிகளும், மருத்துவ நிபுணர்களும் சோதனை மேற் கொண்டுள்ள போதிலும் இதற்கான காரணத்தை அவர்களால் கண்டறிய முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக இரட்டையர்களில் ஒருவரான குடு என்ற சிறுவன் கூறுகையில், அக்கிராமத்தில் உள்ள இரட்டையர்களில் 16 ஜோடி இரட்டையர்கள் மட்டுமே ஒரே மாதிரியாக இருப்பதாகவும் அவர்களில் இருவரையும் அடையாளம் காண்பது கடினம் எனவும் கூறினார்.

இக்கிராமத்திலுள்ள முதியவர் ஒருவர் கூறுகையில், 80 ஆண்டுகளுக்கு முன் கிராமம் முழுவதும் இரட்டைக் குழந்தைகள் அதிகளவு நிறைந்திருந்தனர் என்றார். இந்த வகையில் தங்கள் கிராமத்தை கின்னஸில் பதிவு செய்வது என கிராம மக்கள் முடிவு செய்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

# சமச்சீர் கல்விக்கு இடைக்காலத் தடை என்ற தமிழக அரசின் மேன்முறையீடு நிராகரிப்பு

சமச்சீர் கல்வியை இவ்வாண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஓகஸ்ட் இரண்டாம் திகதிக்குள் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் புத்தகங்கள் வழங்கமாறு தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திமுக ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டத்தில் இடம்பெற்றுள்ள பாடத்திட்டம் தரமற்றதாக உள்ளதால் நடப்பாண்டில் பழைய பாடத்திட்டத்தைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புக்கு இடைக்காலத் தடைவிதிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு கடந்த 19 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

சமச்சீர் கல்வித்திட்டம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், அனைத்து வகுப்புக்களுக்கும் சமச்சீர் கல்வித் திட்டத்தை இந்தக் கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டிருந்தது.

அத்துடன் எதிர்வரும் 22 ஆம் திகதிக்குள் மாணவர் அனைவருக்கும் சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்கள் வழங்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க மறுப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் மாணவர்கள் அனைவருக்கும் ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்குள் புத்தகங்களை வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் இவ் வழக்கின் இறுதி விசாரணை எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் என அறிவித்துள்ளது.



தமிழக முதலமைச்சர், ஜெயலலிதாவை இந்தியாவுக்கான இலங்கைத் உயர்ஸ்தானிகர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடுவதைக் காணலாம்.


## பெற்றோர்களே...!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பனிலுள்ள ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் கையொப்பம்

# மனித நேய உதவிகள் தவிர ஏனையவை நிறுத்தப்பட வேண்டும்

## அமெரிக்கா தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் நிதி உதவியை நிறுத்திவைக்கவேண்டும் என்று கோரும் ஒரு தீர்மானம் அமெரிக்க நாடாளுமன்ற கமிட்டி ஒன்றில வியாழனன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

இலங்கை 2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக்கட்டங்களில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்த ஒரு பொறுப்பு சுமத்தும் நடவடிக்கையை இலங்கை எடுக்காதவரை நிதி உதவி நிறுத்தப்பட வேண்டும் என அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளியுறவு விவகார கமிட்டியினால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக்கு மனித நேய உதவி, நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் உதவி மற்றும் ஜனநாயகம் மற்றும் ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவி ஆகியவை தவிர, பிற விதமான உதவிகள் அனைத்தையும் நிறுத்துகின்ற ஒரு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

கவலைதரும் இலங்கையின் முக்கிய பிரச்சினைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க நிர்வாகம் அத்தாட்சி தந்தால் மட்டுமே, உதவி வழங்கப்பட வேண்டும் என ஜனநாயகக் கட்சி உறுப்பினரான ஹோவர்ட் பெர்மன் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்த தீர்மானம் கூறுகிறது.

# காலாவதியான பெருமளவு கோழி இறைச்சி அழிப்பு

சொசேஞ் தயாரிப்புக்கென இறக்குமதி செய்யப்பட்டிருந்த 2,98,000 கிலோ எடைகொண்ட கோழி இறைச்சியும் சோயா புரதமும் பன்னல பொதுசன சுகாதார வைத்திய அதிகாரிகளால் அழித்தொழிக்கப்பட்டன.

நான்கு கொள்கலன்கள் நிரம்பிய இந்த காலாவதியான கோழி இறைச்சியும் சோயாபுரதமும் பிரேஸில் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்டவை எனவும் இலங்கை வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய தொகை அழிககப்பட்டது இதுவே முதன்முறை எனவும் இலங்கை பொதுசன சுகாதார அதிகாரி சங்கத்தின் செயலாளர் செனரத்பண்டார தெரிவித்தார்.

பன்னல, மாகந்துர தொழிற்பேட்டையில் உள்ள சொசேஞ் தயாரிப்பு நிறுவனமொன்றில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டன. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இத்தகைய உணவுப் பொருள்களை சம்பந்தப்பட்ட சுங்க அதிகாரிகளும் துறைமுக அதிகாரிகளும் பரீட்சித்த பின்பே விடுவிக்க வேண்டும். இவ்வாறான காலாவதியான உணவு வகை உட்கொள்வதனால் வயிற்றுக் கோளாறுகள் மட்டுமன்றி புற்றுநோயும் ஏற்படும் அபாயம் உள்ளதாக செனரத் பண்டார சுட்டிக்காட்டினார்.

# இலங்கை மீது விதிக்கும் தடையானது அமெரிக்கக் கொள்கைக்கு முரணானது



(கொழும்பு)

இலங்கையின் உள் விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் பிறப்பிக்கும் எந்த உத்தரவும் அமெரிக்காவினால் முன்மொழியப்படும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு முரணானது என இலங்கை அரசாங்கம் இன்று கூறியுள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போதான இரத்தக்களறிகள் தொடர்பாக பொறுப்புடைமையை வெளிப்படுத்தத் தவறினால் இலங்கைக்கு அமெரிக்க அரசாங்கத்தின் உதவிகளை தடைசெய்யப்பட வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவின் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் கருத்து கேட்டபோது, அமெரிக்கா இத்தகைய தடையை கொண்டுவந்தால், அது அவர்கள் போதிக்கும் ஜனநாயக கொள் கைகளுக்கு முரணானது. அதன் பின் பொறுப்புடைமை குறித்து ஒருதலைப்பட்சமாக ஆராய வேண்டியிருக்கும் என அவர் கூறினார்.

# நாயினால் உயிரிழந்த வேட்பாளர்

(கொழும்பு)


தேர்தலுக்கான துண்டுப் பிரசுர விநியோகத்துக்கு சென்ற வேடபாளர் ஒருவரை நாயொன்று துரத்தியதில் கீழே தவறி விழுந்த அவர், உயிரிழந்த சம்பவமொன்று காலி, அக்மீமன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அக்மீமன பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட கமல் குமார (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பிரதேச வீடொன்றுக்கு துண்டுப்பிரசுர விநியோகத்துக்காகச்சென்ற மேற்படி வேட்பாளரை நாய் துரத்தியதை அடுத்து கீழே விழுந்துள்ள அவரது தலையில் பலமாக அடிபட்டமையே மரணத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இராணுவத்தினர் அமைத்த வீடுகள்

## ஜனாதிபதியால் மக்களுக்கு கையளிப்பு



வட பகுதி மக்களுக்காக கீரிமலையில் இராணுவத்தினரால் 10 நாட்களில் அமைக்கப்பட்ட 100 வீடுகள் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.

ஒவ்வொன்றும் 3 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட இந்த வீடுகள் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் பன்முகப்படுத்தப்படுத்த நிதியைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன.

கீரிமலை - சாவகச்சேரி.- மானிப்பாய் - ஊர்காவற்றுறை மற்றும் காங்கேசன்துறை ஆகிய இடங்களில் யாழ் .கட்டளைத் தளபதி ஹதுருசிங்கவின் மேற்பார்வையில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டன.

# சட்டவிரோதமாகப் பிரவேசித்த ஆறு இலங்கையர்கள் கைது

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தபோது இலங்கையர்கள் ஆறு பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.இவர்கள் பேரு நாட்டில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள லக்ஸ் விமான நிலையத்தை வந்தடைந்து இருந்தனர்.

இவர்களில் மூவர் ஆண்கள். ஏனையோர் ஒரு தாயும் இரு குழந்தைகளும்.இவர்கள் விமானத்தின் மலசலகூடத்துக்குள் சென்று கடவுச்சீட்டுக்களை கிழித்துப் போட்டிருக்கின்றார்கள். விமான சிப்பந்திகள் இதை அவதானித்தனர்.

தொடர்ந்து கைது இடம்பெற்றது. அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு பேச்சாளர் இத்தகவலை உறுதிப்படுத்தி உள்ளார்.

குடிவரவு அதிகாரிகளிடம் பெரியவர்கள் கையளிக்கப்பட்டு உள்ளார்கள். சிறுவர் சேவைகள் அதிகாரிகளிடம் குழந்தைகள் கையளிக்கப்பட்டு உள்ளார்கள்.

# மன்னாரில் தனியார் பேருந்து தீக்கிரை



மன்னார் மூர்வீதியில் உள்ள பாடசாலை ஒன்றிற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியாருக்குச் செந்தமான பேருந்து ஒன்று நேற்று அதிகாலை இனம் தெரியாதோரினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புகலிடக் கோரிக்கை தாமதம் தஞ்சம் புகுந்தோர் அதிருப்தி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவும் மலேசியாவும் புகலிடக் கோரிக்கையாளர்களை பரிமாறிக் கொள்வது தொடர்பிலான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை இரு நாடுகளுக்கும் இடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த 800 புகலிடக் கோரிக்கையாளர்களை, மலேசியாவிற்கு அனுப்பிவைப்பது தொடர்பில் மலேசியாவுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கைகள் தாமதமடைவதாகவும், அதிகளவு சன நெரிசல் காணப்படுவதாகவும் கிறிஸ்மஸ் தீவுகளில் தஞ்சம் புகுந்துள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

## அச்சம், பீதியற்ற...


படுத்துவதற்காக செய்தியாளர் மாநாடொன்றை தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடாத்தியது. இச்செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இத்தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் வடமாகாணத்தில் 5 நடமாடும் வாகனங்களை ஈடுபடுத்தவுள்ளோம். நாம் தேர்தல் கண்காணிப்பு பணியில் வைதத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் என மக்களின் அங்கீகாரம் பெற்றவர்களையே ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் வடபகுதியில் உள்ள காவலரண்களில் பாதுகாப்பு படையினரே பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இப்போது காவலரண்ங்களில் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தலை நீதியாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் எடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்புக்குரியது என்றார்.

## செய்திப்பரணி

**இன்னமும் ஒருவருக்கும் அறிவு வளரவில்லை என்பதைக் காட்டும் இளம்பெண்ணின் - துன்பியல்சா இன்னொருவர் ஆளுமையை என்றென்றும் கையெடுக்கும் வன்முறை அநாகரீக வழி!**



# மர்மமான முறையில் மரணம் மோதிரங்களுக்கான கொலையா?



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வளவொன்றில் மர்மமான முறையில் இறந்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் குருநகர மவுண்கார் மேல் வீதியைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான எஸ்.ஜேசுதாஸ் சிலுவைதாசன் (வயது 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட சடலத்தைப் பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தனர். இவர் விரலில் இரண்டு மோதிரங்களை அணிந்திருந்தார் எனவும், மரணமடைந்தபின் அம்மோதிரங்களைக் காணவில்லை என அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இவரது மர்ம மரணம் தொடர்பாக யாழ்பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நேற்றுப் பிற்பகல் இவரது சடலம் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எஸ்.68)

# ஒஸ்லோவில் குண்டுவெடிப்பு இருவர் பலி; 15 பேர் காயம்

(ஒஸ்லோ)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பிரதமர் அலுவலகம் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் அவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

இதுவரைக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், 15 பேர் காயமடைந்துள்ளனர்.

எனினும், கட்டட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்கலாம் எனவும் மீட்புப் பணிகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையில் எவரும் உரிமை கோரவில்லை.

குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒஸ்லோ நகரின் முக்கிய வீதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் பிரதமருக்கோ அல்லது அமைச்சரகளுக்கோ ஆபத்து ஏற்படவில்லை என நம்புவதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



# வடக்கு-கிழக்கைச் சேர்ந்த இளைஞர்-யுவதிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் நாட்டம்

வடக்கு கிழக்கைச் சேர்ந்த அதிகளவான இளைஞர் யுவதிகள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கு அதிகளவு ஆர்வம் காட்டி வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பிலும்

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகத் தெரிவித்து மோசடியில் ஈடுபடுவோரிடமிருந்து எவ்வாறு தங்களை பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பிலும் வடக்கு கிழக்கு இளைஞர் யுவதிகளுக்கு விளக்கமளிக்கப்பட உள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கிளைக் காரியாலயங்கள் ஏற்கனவே அமைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் பாகிஸ்தானியர் கைது

பஹ்ரேனிலிருந்து 20 இலட்சம் பெறுமதியான 284 கிராம் ஹெரொயினுடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த நபர் ஒருவரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர். இவர் 58 வயதுடைய பாகிஸ்தானிய பிரஜை எனவும், பாகிஸ்தான் ஹோட்டல் ஒன்றில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றியவர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரனைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.குடாவில் ஒரே நேரத்தில் 36 பாடசாலைக் கட்டடங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் 36 பாடசாலைகளின் கட்டடங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

வட மாகாண மக்களின் கல்வித்துறை மேம்பாட்டை கருத்திற் கொண்டு ஒரு கோடி 30 இலட்சம் ரூபா இந்த திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், முக்கிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஒரே நேரத்தில் பாடசாலை கட்டடங்களை திறந்து வைத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# 114 அகதிகளுடன் இரு படகுகள் அவுஸ்திரேலியக் கடற்படை கைப்பற்றியது

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் கடந்த 24 மணி நேரத்தில் அகதிகளை ஏற்றிச்சென்ற இரு படகுகள் கைப்பற்றப்பட்டதாக அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் பிரெண்டன் ஓ கொர்னர் தெரிவித்துள்ளார். 62 பேரை ஏற்றிக்கொண்டு வந்த படகை நேற்று முன்தினம் கடற்படையினர் கைப்பற்றியதாகவும் கடந்த புதன்கிழமை 52 அகதிகளை ஏற்றிவந்த படகு கைப்பற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அவர்கள் அனைவரும் தீவுப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் போராட்டம் நடாத்தி வருவதாக அகதிகளுக்கான சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உடமைகளை சேதமாக்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். நேற்று முன்தினம் அவுஸ்திரேலிய நேரம் மாலை 6.00 மணி வரை இந்த கலவரங்கள் இடம் பெற்றுள்ளன.

# அரசியல் கைதிகள் மூவர் மீது சிறை அதிகாரிகள் தாக்குதல்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளான

ஆறுமுகம் சந்திரகுமார் (வயது : 23) பதுளை, தங்கராசா காண்டீபன் (வயது : 29) பேத்தாளை, வாழைச்சேனை, தேவதர்சன் (வயது : 24) கறுவாக்கேணி மட்டக்களப்பு ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளான ஜெரோம் அருள்வாளன் மற்றும் நடேசன் ஆகியோரால் தாக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்றுக் காலை வழக்கம் போல சிறைக் கைதிகள் அனைவரும் குளிப்பதற்கு சென்றுள்ளனர் அங்கு தண்ணீர் பற்றாக் குறையாக இருந்ததனால் இது விடயமாக சிறைச்சாலை அதிகாரிகளிடம் பேசுவதற்காக மேற்குறித்த மூன்று அரசியல் கைதிகளும் சென்றபோதே குறித்த அதிகாரிகளால் அவர்கள் தாக்கப்பட்டதாகவும் அத்துடன், அந்த அதிகாரிகள் மிகவும் கடுமையான இழிவான வார்த்தைகளைப் பிரயோகித்ததாகவும் தாக்குதலுக்குள்ளான அந்த அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இந்த தாக்குதலைக் கண்டித்து குறித்த அரசியல் கைதிகளுடன் ஜெகதீசன் கண்ணன் (வயது-39), தர்மராசா சிவராஸ் (வயது-29), நிலந்த குமார் (வயது-23) புலேந்திரன் (வயது-42) ஆகிய அரசியல் கைதிகளும் சேர்ந்து இன்று முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

THE FAITH LIFE CHURCH
விசுவாச வாழ்வு அற்புதப் பெருவிழா
ASSEMBLIES OF GOD
ALL THE GOSPEL AG
காலம் : 23,24-07-2011 சனி, ஞாயிறு மாலை 4.29 மணிக்கு
இடம் : காந்தி சனசமூக நிலைய வெளியரங்கு, அரியாலை
நிகழ்வுகள்: இன்னிசை விருந்து, நடன அலைக்காற்றுகை, மழலைகள் பாடல் ஆடல், கடவுளின் அற்புத சாட்சிகள்
இதுவரை கண்டிராத அதிசய நிகழ்வு
தேவ ஆசீர்வாத செய்தி, விடுதலைப் பிரார்த்தனை—
வண: க.பாஸ்கரன் தலைமைப்போதகர் விசுவாச வாழ்வு திருச்சபை, நெதர்லாந்து



அற்புதம் காண திரண்டு வாரீர்
இவரது ஊழியத்தில் அனேக மக்கள் சொசின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவதும், தீராத நோய்கள் சுகமடைவதும், குறைகள் நீங்குவதும், செல்வச் செழிப்பை காண்பதும், வாழ்க்கை சிறப்பதையும் நீங்கள் கண்டு உணரலாம்!
Mc AG Kondavil
The Faith Life Church, Netherland
தொடர்பு: பாஸ்ரர் க. ராஜா 077 7299991, பாஸ்ரர் க.பாஸ்கரன் 077 1134352

மாபெரும் பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
விதவிதமான எண்ணற்ற ஆடைத்தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்
இன்னும் எட்டு நாட்கள் மாத்திரமே மலிவு விற்பனை நடைபெறும்.
காலம் :– 09.07.2011 தொடக்கம் 31.07.2011 வரை
நேரம் :– காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை
நல்லூர்
சரவணா ரெக்ஸ்





(C546)
குறிப்பு :– ஆடித்தள்ளுபடியை முன்னிட்டு ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்.
இடம் :– சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை (கெங்காதரன் மருத்துவமனை அருகாமை, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 07 சனிக்கிழமை (23.07.2011) பக்கங்கள் IV

தினமும் வருகிறது


தினமுரசு

16 பக்கங்கள்

10 ரூபா மட்டுமே

# வீர வசனங்களால் நமக்கு விடியல் வரப்போவதில்லை

**மீண்டும் இனமுரண்பாட்டை வளர்த்து மக்களை அழிவிற்கும், அவலத்திற்கும் தள்ளிவிடுகின்ற ஒரு ஆபத்தான அரசிய லையே இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதன் மூலம் மக்கள் மீளவும் அழிவுப் பாதையையே தேர்ந்தெடுக்க வேண்டுமா?**



முந்தியும் சரி, இப்போதும் சரி, எந்தக் காலத்திலும் தமிழ்த் தலைவர்களாயிருந்தவர்களின் - இருக்கிறவர்களின் வம்சம் எதுவும் இந்த மண்ணில் இல்லை. ஆனால் மக்களாகிய நாம் அவர்களுக்காக நின்றதுடன் சொல்லொண்ணா கஷ்டங்களையும் தாஙக முடியாத துயரங்களையும் சுமந்தோம்.

முப்பது ஆண்டுகாலப் போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு, அறுபது ஆண்டு கால இனமுரண்பாட்டிற்குத் தீர்வு காணும் முயற்சிகள் நடந்துவரும் இவ்வேளையில், போருக்குப் பின்னரான அரசியலில் மக்கள் நலன்சார்ந்த அத்தியாவசியத் தேவைகளில் கூட கூட்டமைப்புச் செயற்படவில்லையே. சரி போருக்குப் பிந்திய தமது அரசியலில் கூட இவர்கள் ஏதாவது உபாயத்தை வைத்திருக்கிறார்களா?

போருக்குப் பின்னர் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் முன்னேற்றத்தையும், உருவாக்கப்பட்டிருக்கும் இயல்பு வாழ்வையும் இழக்கும் வகையிலானதாகவே கூட்டமைப்பிற்கான வாக்களிப்பு அமைந்துவிடும்.

மக்களின் நாளாந்த வாழ்வை சீர்குலைக்கும் வகையிலேயே கூட்டமைப்பு மக்களிடம் கேட்கிறது வாக்கு.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகளின் கோரிக்கைக்கு இணங்க ஒன்றுபட்டு ஆதரவளித்த மக்கள் கண்டதென்ன?

போருக்குப் பின்னர் மக்களின் இயல்பு வாழ்வை மேம்படுத்தும் வகையில் கூட்டமைப்பு எம்.பிக்கள் தமது ஒரு மாத ஊதியத்தை அல்லது ஓராண்டு நிதியையாவது ஒதுக்கினார்களா?

தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய கட்சியை மட்டும் சுட்டிக்காட்டி எழுதிவரும் பத்திரிகைகள் எவையாவது இதனை சுட்டிக்காட்டி இருக்கின்றனவா? இது குறித்து தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் எனக் கூறப்படுவோர் சிந்தித்தார்களா?

மக்களை ஒன்றுபடக் கேட்கும் இவர்கள முதலில் தமக்கிடையே ஒன்றுமையை நிரூபித்துக் காட்ட வேண்டும். தேர்தல் கால தேவைக்காகப் இணைவதும், பிரிவதும், இவர்களின் வாடிக்கையான கதையாகிவிட்டது.

சொந்த மக்களின் அரசியல் வாழ்விற்கும், அவசரத் தேவைகளுக்கும் உதவுவதற்குப் பதிலாக அமெரிக்கா உதவப் போகிறது, இந்தியா ஆதரவளிக்கும், ஐ.நா.வரப்போகிறது என்று பழைய கதைகளையே மீண்டும் மீண்டும் சொல்லி மக்களை ஏமாற்றுகின்றனர். இவர்கள் சொல்லிய யாராவது இதுவரை வந்தார்களா? எதுவும் நடந்ததில்லை. எதற்கு இந்தத் தொடர் வீரப்பேச்சுக்களும் ஏமாற்றுகளும்.

திட்டமில்லை, தீர்மானமில்லை, மக்களது அல்லல் போக்கும் வழிதெரியவில்லை. பேச்சுவார்த்தையிலும் எதையும் சாதிக்கத் தெரியவில்லை. அரசாங்கமும், சிங்களவரும் விரோதிகள் என வீர முழக்கமிடத் தெரிகிறதே தவிர எமக்கான தீர்வையும் உரிமைகளையும் எப்படி எடுக்கப் போகிறோம்? எப்படி நமது இன்னல்கள் களைந்து வாழப் போகிறோம்?

உருப்படியான யோசனை உண்டா? உபாயம் உண்டா? ஒன்றுமேயில்லாத வெற்றுக் கட்டத்தை எப்படி ஆதரிப்பது?

எனவே ஏமாற்று வீரவசனங்களை மட்டும் வைத்திருப்பவர்களை நம்பி மோசம் போகாது, மக்களே சிந்தித்து வாக்களித்து எதிர்காலத்தை சிறப்பனதாக அமையுங்கள்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தவிர்க்க வேண்டியது ஏன்?

வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்று. பிரதானமாக, தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜக்கிய தேசியக் கட்சி, சுரேஸ் அணி, செல்வம் அணி ஆகிய கட்சிகளின் கூட்டான தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு தரப்பிலும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய ஆளும் ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மறு தரப்பிலுமாக இத் தேர்தலில் களமிறங்கியுள்ளன.

மாவட்ட சபை, பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என ஏறத்தாழ 30 ஆண்டுகளாக 'தத்தி தத்தி' வந்த பேசி பிரச்சினையைத் தீர்க்கும் திட்டங்கள் அனைத்தையும், திம்புப் பேச்சுவார்த்தையுடன் ஒரு தரிப்பிற்குக் கொண்டுவந்திருந்த தமிழ் தேசிய-இனவாத அரசியல் தலைமை, ஆயுதப் போர் மூலம் இலங்கை அரசை அடிபணியச்செய்து 'இழந்த உரிமைகளைப்' பெற்றுக் கொள்ளும் தமிழர் தலைமையின் 'தீர்க்க தரிசனம்' தோற்றுப்போன பின்னர், மீண்டும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டத்தை தூசுதட்டி எடுத்து, இதுவரையில் எந்தவித இலக்குகளையும் எட்டியிராத பேச்சுவார்த்தை மேசையில் தங்களைப் 'பலப்படுத்த' ஆணை கோரி இத்தேர்தலில் களமிறங்கியுள்ளது. அத்துடன், அபிவிருத்தி பற்றியும் அவர்கள் இம்முறை அக்கறைகொள்ள தவிர்க்க முடியாமல் தள்ளப்பட்டுள்ளது அவர்களது பிரச்சாரவேலைகளில் தெளிவாகத் தெரிகிறது.

எதிரணியில், பிரதானமாக தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளில் தமது அக்கறையைத் தெளிவாகத் தெரிவித்து ஏழை எளிய வறிய மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் பலவற்றிற்கு இயலுமான வழிகளில் உதவிவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அணி, இணக்க அரசியல் மூலம் அரசியல் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் இணங்கித் தீர்ப்பதற்கு அதிகரித்த ஆதரவைக் கோரி தனது தரப்பை களத்தில் இறக்கியுள்ளது.



உண்மையில் உள்ளூர் அபிவிருத்தி வேலைகளை செய்ய மட்டுமே அதிகாரமுள்ள உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு தேர்தலில் அரசியல் உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆணையைக் கோரி வாக்குகளைக் கேட்பது அர்த்தமற்றதெனினும், இம்முறை அரசியல் உரிமைப் பிரச்சினைகளின் அடிப்படையிலேயே வேட்பாளர்களைத் தெரிவுசெய்ய வாக்காளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதிலும், இரண்டு தரப்புமே போர் மூலமன்றி இலங்கை அரசுடன் பேசியே அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என வெளிப்படுத்தி நிற்கும் ஒரு நிலையில, வாக்காளர்கள் தமது தெரிவுகளை செய்வதில் தடுமாற இடமுண்டு.

இந்நிலையில், இரண்டு தரப்பினரதும் இதுவரைகால அரசியல் வேலைமுறைகளை எடுத்து ஆராய்ந்து, அணுகுமுறையில் இரண்டு தரப்பிற்கும் இடையிலுள்ள அடிப்படை வேறுபாடுகளை தெளிவாக இனங்காண வேண்டியது வாக்காளர் அனைவருக்கும் அவசியம்.

'ஈழம்' ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் எந்தவித ஏற்பாடுகளுமின்றி, அப்பாவி மக்களின் வாக்குகளை அபகரிக்க தமிழழும் அமைக்க ஆணை தாருங்கள் என இளைஞர்களை உருவேற்றி ஏறத்தாழ 30 வருடகாலமாக ஒரு கொடிய போரைத் தொடர பிள்ளையார் சுழியிட்டதே இந்தத் தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைமை.

இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமானதொரு தீர்வினைக் காண முனைந்தவர்கள் திரும்பத் திரும்பத் தோல்விகளையே தழுவி வந்தது இலங்கை அரசியலின் ஆரோக்கியமற்றதொரு அம்சமாக இருந்து வந்துள்ளது. இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் சட்டசபை ஆசனங்களை 'சரிவர'ப் பகிர்ந்து கொள்ளும் சச்சரவுகளாக தொடங்கி, சுதந்திரத்திற்குப் பின்னர், தனிச் சிங்களச் சட்டம் - தமிழ் பிரதேசங்கள் பறித்தெடுப்பு - தரப்படுத்தல் - தமிழ்-சிங்கள இனக் கலவரம் என 'தறி கெட்டு' ஓடிவந்த தமிழ் இனப் பிரச்சினையை பேசித் தீர்ப்பதற்கு, தமிழ்-சிங்கள அரசியல் தலைவர்களால் இணக்கங் காணப்பட்ட ஏற்பாடுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது உண்மையே.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தீர்க்க தரிசனமற்ற அரசியல் வழிமுறைகளின் ஆதரவாளர்கள், இதனையே 'பேசிப் பயனில்லை' எனப் பிரச்சாரப்படுத்தி வருகினறனர். ஆனால், ஈழப்போராட்டம் தொடங்கிய பின்னர், இனப்பிரச்சினையை இணக்கமாக பேசித் தீர்க்க பிரதான தமிழ் அரசியல் தலைமைகள் எவையும் இதய சுத்தியுடன் ஈடுபட்டிருககவில்லை என்பதை எம்மில் பலர் புரிந்து கொள்வதில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் ஒரு வரப்பிரசாதமாக வந்த வட-கிழக்கு மாகாண சபையும், நல்லதொரு பிரேரணை என பின்நாளில் புலிகளாலேயே பகிரங்கமாக பரிந்துரைக்கப்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் தீர்வுத் திட்டமும், தமிழர் தரப்பினாலும் தட்டிக் கழிக்கப்பட்டதற்கு இதுவரையில் எந்தவித தர்க்கீக நியாயங்களும் தரப்பட்டிருக்கவில்லை. தமிழ் அரசியல் பிரச்சினைக்கான தீர்வைக்காணும் தீர்வைக் காணும் தமிழ் தேசிய அரசியல் தலைமையின் இதுவரைகால அணுகுமுறை முழுத் தமிழ் மக்களின் தலைவிதியிலும் இதுவரையில் எந்தவித திருப்பத்தையும் ஏறட்படுத்தவில்லை என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல் உரிமைப் பிரச்சினைகளை போருக்குப்பின் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப் புறப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு, முதலாவது ஈழப்போர், இரண்டாவது ஈழப் போர் என்று 'இழுபறிப்பட்டு' வந்ததைப்போல், முதலாவது பேச்சுவார்த்தை, இரண்டாவது பேச்சுவார்த்தை என எட்டு முறை பேச்சுவார்த்தை மேசைக்குச்சென்றும் எந்தவித திருப்புமுனைகளையும் எட்ட முடியாத அரசியல் கையாலாகாத இழுபறிநிலையில், பேச்சுவார்த்தையில் வெற்றியைப் பெற்றுத் தர எமக்கு வாக்களியுங்கள் என தம்மால்



(IV ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினை தீருமா?... தலை விதி மாறுமா?...

தமிழ் மக்களின் வரலாறு நெருப் பாற்றைக் கடந்து வந்தது!. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் அகிம்சையில் இருந்து ஆயுதப்போராட்ட மாகவும், ஆயுதப்போராட்டத்தில் இருந்து மறுபடியும் அகிம்சை வழிக் கும் மாறியிருக்கிறது. ஆனாலும் தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினை என்பது இறுதி வரை தீராப் பிரச்சினையாகவே நீடித்தும் வந்திருக்கின்றது!

தமிழர் தலைவிதியை மாற்றுவோம் என்ற கோஷங்கள் யாவும் வெற்றுக் கோஷங்களாகவே காலம் காலமாக எழுப்பப்பட்டு வருகிறது! வெற்றுக் கோஷங்களையும், அவற்றை முன் வைத்து வருகின்ற தமிழ்த் தலைமை களையும் நம்பித் தமிழ் மக்கள் மோசம் போன வரலாறுகளே இங்கு எஞ்சியுளளன.

77 ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் போது தனிநாடு அமைப்



பதற்கு ஆணை தாருங்கள் என்று கேட்டது தமிழ்த் தலைமை அதனால் 18 நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டனர். தமிழ் இளைஞர் யுவதிகளின் நரம்புகளை முறுக்கேற்றி, இரத்தத்தை சூடேற்றியே 18 ஆசனங் களைப் பெற்றனர். இதனால் வீதிக்கு வந்த எமது இளையோர்கள் ஆயுதம் ஏந்திப் போராட்டக் களத்தில் நிற்கை யில், தமிழீழ ஆணை கேட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நாட்டை விட்டே ஓடிவிட்டனர்.

தனி நாடு கேட்டவர்கள் தமிழ் நாட்டிற்கு ஓடிச் சென்று தனி வீடு பெற்றுத் தம் குடும்பங்களோடு சொகுசாக வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆனாலும் தூண்டி விடப்பட்ட அப் பாவி இளைஞர்களும், யுவதிகளும், அப்பாவி மக்களும் மட்டுமே இங்கே துயரங்களைச் சுமந்து நின்றனர்.

## ஒற்றுமைத் துஷ்பிரயோகம்



77 க்குப் பின்னர் பலம் பொருந்திய அமைப்பாகத் தமிழ்த் தலைமைகள் திகழ்ந்தது 2004 இல் நடந்த தேர்த லின் போதுதான்! ஒற்றுமையின் பலத்தை உலகுக்குக் காட்டுங்கள், இதுவே இறுதி சந்தர்ப்பம் எனக் கூறியே 2004 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் வாக்குக் கேட்டனர். மோசடித் தேர்தலாக இருந்த போதிலும் 22 நாடாளுமன்ற உறுப்புரி மையை அவர்கள் பெற்றிருந்தனர்.

ஒற்றுமையின் பலத்தை உலகுக் குக் காட்டுங்கள் என்று கேட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் எல்லாவற்றை யும் பெற்றுத் தருவோம் என்று வாக் குறுதியும் கொடுத்திருந்தனர். ஆனா லும் அவர்கள் சர்வதேசத்தின் ஊடா கவோ, அன்றி இலங்கை அரசோடு பேசியோ தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுத்தந்திருக்கவில்லை. மாறாக அழிவு தரும் சூழலை உருவாக்கவே தமது நாடாளுமன்ற உறுப்புரிமையை துஷ்பிரயோகம் செய்திருந்தனர்.

- நாடாளுமன்றத்தில் உரையாற் றும் போது 40 ஆயிரம் சவப்பெட்டிக ளைத் தயாராக வைத்திருங்கள் யாழில் உள்ள 40 ஆயிரம் படையின ரையும் சடலங்களாக அனுப்புவோம் என அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விட்டமை!.
- இளைஞர் யுவதிகளை வீதிக்கு அழைத்து படையினரின் சோதனைச் சாவடிகளை எரிக்கச் சொல்லித் தூண்டிவிட்டமை!
- அப்பாவி மக்களை ஏவி விட்டு படையினர் மீது கல்லெறியுமாறு தூணடி விட்டமை!
- யாழ் பல்கலைக் கழக சமூ கததை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக படையினருக்கு எதிராக வன்முறைப் போராட்டங்களுக்குத் தூண்டி விட்டமை!

இதனால் படையினருக்கும் அப் பாவி மக்களுக்கும் இடையிலான பகை யுணர்வுகள் தூண்டி விடப்பட்டன.

## அழியவிட்டு வாளாவிருந்தனர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பகை மூட்டி, புகை மூட்டி, தமிழர் வாழ விடங்களை ஒரு பதட்டமான சூழலுக் குள் தள்ளிவிட்டு நாட்டை விட்டே ஓடிப் போய்விட்டனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் 22 நாடாளுமன்ற உறுப்புரிமையைக் கொண டிருந்த போதுதான் இங்கு பாரிய அழிவுகள் நடந்தன. கிழக்கு மாகா ணத்தைப் படையினர் தமது கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்த பின்னர் வடக்கு நோக்கியும் ஒரு படைநகர்வை மேற்கொள்ள அரசு நினைத்தது.

அப்போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார்.

யுத்தம் கொடுமையானது அது தமிழ் மக்களை அழிக்கப் போகிறது. இந்த அழிவைத் தடுத்து நிறுத்த 22 நாடாளுமன்ற உறுப்புரிமைப் பலத்தைக் கொண்டிருக்கும் உங்களால் முடியும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர் கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராக உள்ளார். நானே உங்களை அழைதது்ச் சென்று அரசுடன் பேசி இந்த அழிவு யுத்தத்தைத் தடுத்து, எமது மக்களை காப்பாற்றுவோம் வாருங்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர்களை நோக்கி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் பார்ப்போம் என்றும், யோசிப் போம் என்றும் காலம் கடத்தும் பதில் களையே சொல்லி இருந்தனர். இந்தப் பேச்சு முயற்சிகள் தோலவியில் முடிந்தபோது தான் வன்னி நோக்கிய படை நகர்வும் அழிவுகளும் நிகழ்ந்தன. இதனால் தமிழ் மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முள்ளி வாய்க் கால் அவலங்கள் வரை தள்ளியும் விட்டிருந்தனர்.

வன்னியில் இருந்து அவலப்பட்டு துடிதுடித்து மடிந்து போன மக்களில் எஞ்சிய மக்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் ஓடி வந்தபோது அவர்களுக்கு எந்த விதத்திலேனும் உதவுவதற்கோ, அன்றி அவர்களின் துயர்களைத் துடைப் பதற்கோ தமிழ் மக்களின் வாக்குக ளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வந்திருக்கவில்லை. ஆக மொத்தத்தில் தமிழர் ஒற்று மையை உலகத்தின் கண் முன்பாக காட்டச் சொன்ன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களிடமிருந்து தாம் பெற்ற தமது நாடாளுமன்ற அரசியல் பலத்தை வைத்து அழிவு யுத்தத்தை தடுத்து நிறுத்தவும் வரவில்லை. அவலப்பட்டு நின்ற மக்களின் துயரங்களைத் துடைக்கவும் வந்திருக்கவில்லை. மாறாக அழிவு தரும் சூழலை மட்டுமே தூண்டி விட்டிருக்கிறார்கள் என்பது மட்டும்தான் உண்மை!

## அற்ப சலுகையும் பின்கதவும்

2010 ஆம் ஆண்டு 14 ஆசனங்க ளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர், அரசாங்கத்தோடு உரிமை குறித்துப் பேசி வருவதாக சொல்கி றார்கள். ஆனாலும் அவர்கள் அதே வேளையில் பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்து இரகசி யமாகவும் பேசி வருகிறார்கள்.

இதன்போது தமிழ் மக்களின் வாழ் வாதார வசதிகள் குறித்தோ, அபி விருத்திப்பணிகள் குறித்தோ, அன்றி அரசியல் தீர்வு பற்றியோ எதுவும் பேசப்பட்டிருக்கவில்லை. தமது பிள்ளை களின் வெளி நாட்டு உயர் கல்வி, மற்றும் தாம் உலக நாடுகளுக்கு சுற்றித திரியும் அனுமதிகள் குறித்தே பேசப் படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இப்போது தேர்தல் காலம்! மறு படியும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல் வாக்குகளை அபகரிப் பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் மீண்டும் மேடைகள் தோறும் வீரமுழக்கமிட்டு வருகின்றனர்.

- அரசை கவிழ்க்கவும் தயங்க மாட்டோம்!
- வெகுஜனப் போராட்டம் வெடிககும்!
- முள்ளி வாய்க்காலில் கைவிட டதை தொடர்ந்து முன்னெடுப்போம்!

இவைகள் தான் அந்த வீரமுழக் கங்கள்! இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசும் போது, நாம் திரும்பவும் அழிவை நோக்கி செல்லப் போகின்றோமோ என்ற அச்சம் தமிழ் மக்களிடையே பீடித்துள்ளது!

## வீரமுழக்கமும், தப்புகையும்

வீரமுழக்கமிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் நடத்தப் போவ தாகக் கூறிவரும் போராட்டங்களில் தாம் கடந்த காலங்களைப்போல் மக்களை கைவிட்டு ஓடிப் போகாமல் மக்களோடு நிற்பார்களா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

முள்ளிவாய்க்காலில் இருந்து தொடங்குவோம் என்று கூறும் தமிழ்த தேசியக் கூட்டமைப்பினர் அந்த நடவடிக் கையில் தமது பிள்ளைகளையோ, பேரப்பிள்ளைகளையோ, அல்லது குடும்பத்தவர்களையோ ஈடுபடுத்து வார்களா? என்ற கேள்விகள் தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது.

ஆகமொத்தத்தில் அப்பாவி மக்க ளையும் அடுததவர்களின் பிள்ளைக ளையும் வைத்தே அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடும் தேர்தல் காலச் சுத்தச் சுயநல அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் தமிழ் மக்க ளின் வாக்குகளை அபகரிப்பதற்காக வீரமுழக்கமிட்டுவிட்டு அப்பாவி மக்க ளான தம்மை அவலங்களுக்குள் சிறைப்படுத்திவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் மட்டும் தமது குடும்பங்களோடு வெளிநாடுகளுக்கு தப்பித்து ஓடிப்போய் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்த வடுக்கள் தமிழ் மக்கள் மத்தியில் நெருப்பாக எரிந்து கொண்டே இருக்கிறது.

ஆகவே தமிழ் மக்களின் தலை விதியை மாற்றி அமைக்கும் பொறுப் புணர்ச்சி என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இல்லை என்பது இப்போது தமிழ் மக்களிற்கு தெளிவாகி வருகிறது. அதற்காக வேறு மாற்றுவழி இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பொய்யான பரப்புரைகளை நம்பவும் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதும் வெளிப்பட்டு வருகின்றது.

## ஏமாறும் காலம் முடிகிறது

தமிழ் மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றி விட்டது என்பதற் காக யாரிடமும் சரனாகதி அடைய வேண்டிய தேவையும் தமிழ் மக்க ளிற்கு இல்லை.

தமிழ்ச் சமூகம் யாரிடமும் தோற் றுப்போன சமூகம் இல்லை. தவறான வழிமுறைகளே தோற்றுப் போயிருக்கின்றன.

தமிழ்ச் சமூகம் தமது வாக்குகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தாரைவார்த்துக் கொடுத்து நடுத்தெரு வில் நின்ற காலம் மலை ஏறிவிட்டது.

நாம் அறிவு சார்ந்த சமூகம் புத்தி மான் பலவான் என்பது போல் சாணக கிய தந்திரங்களால் எதையும் பெறமுடி யும் என்ற தெரிவு ஒன்றுதான் இன்று தமிழ் மக்களிடையே எஞ்சியிருக்கின்றது.

2004 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது புலிகளால் சிபாரிசு செய்யப் பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் 2010 ஆம் ஆண்டு தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக் கப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்கு நாடாளுமன்றப் பிச்சை போட்ட புலிக ளுக்கும் துரோகம் இழைத்திருக்கின்றது.

இதேவேளை இதுவரை தமக்கு வாக்களித்து வந்த தமிழ் மக்களிற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தமிழ் மக்களுக்கும் துரோகம் இழைத்து வருகின்றது.

அது மட்டுமன்றி பேசித் தீர்ப்பதற் காக வாருங்கள் என்று அரசாங்கம் அழைத்த போது அதையும் நிராக ரித்து தமிழ் மக்களின் பிரச்சினை யைத் தீர்க்க விரும்பாமல் தீராப் பிரச் சினையாக வைத்து அதில் அரசியல் இலாபம் அடைவதற்காக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அனைவருக்குமே துரோகம் இழைத்து விட்டது. மொத் தத்தில் இவர்கள் தமிழ் மக்கள் உட்பட யாருக்குமே நண்பர்கள் இல்லை.

தமிழ்ச் சமூகம் தமது வாக்குகளை வாரிக்கொடுத்து இனியும் யாரிடமும் ஏமாந்த சமூகமாக இருக்கப் போவ தில்லை. மதிநுட்பம் நிறைந்த சமூகமே தமிழ்ச் சமூகம் என்பதை முகத்தில் அறைந்தது போல் எடுத்துச் சொல்லும் சூழல் தேடி வந்திருக்கிறது.

இந்த அரிய வாய்ப்பை உரிய முறை யில் பயன்படுத்த தமிழ்ச் சமூகம் தயாராகிவிட்டது.

# தன்மானத் தமிழனும் "சப்றா" நிதி மோசடியும்!



இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பிரச்சாரத்தில் கூட்டமைப்பினர், வாழ்வாதாரத்திற்காக உதவி வேண்டிச் செல்லும் தமிழ்மக்களைத் துரோகிகள் என்று சொல்லித் தூற்றியிருப்பதோடு, இன வாதத்தையும் முழுவீச்சில் கக்குகிறார்கள். இது அவர்களது தோல்விப் பயத்தின் விளைவுதான் என்று அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுவது ஒருபுறமிருக்கட்டும். கூட்டமைப்பினர் காலத்துக்குக் காலம் தங்கள் அரசியல் எதிரிகளைத் துரோகிகள் என முத்திரை குத்துவதும், அவர்களைக் கொல்லச் சொல்லி இளைஞர்களைத் தூண்டி வன்முறையைக் கக்குவதும்தான் வரலாறாக இருந்து வருகிறது.

இப்போது வசதி வாய்ப்புகளுக்கு ஏங்கும் அப்பாவி மக்களைத் துரோகிகள் என்று சுட்டிக்காட்டியிருப்பதோடு, அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று யாருக்குக் காட்டிக் கொடுக்கிறார்கள்? என்று கரவெட்டி அன்பன் என்ற பெயரில் கடிதம் எழுதியிருக்கும் அன்பர் கேட்டிருக்கிறார்.

அவர் தனது கடிதத்தில் மேலும்,

"தன்மானத் தமிழன், சுயகௌரவத் தமிழன் அரசாங்கத்திடம் சலுகைகள் பெறமாட்டான்" என்று, சப்றா நிதி மோசடி மூலம் தமிழ்மக்களை ஒட்டாண்டிகளாக்கி அலையவிட்ட சரவணபவன் சொல்லிக் கேட்க வேண்டிய அவல நிலையுமா தமிழர்களுக்கு வரவேண்டும்? என்றும் கவலை வெளியிட்டிருக்கிறார். கூழைக்கும்பிடு போட்டே அரசாங்கத்திடம் சகல சலுகைகளையும் தனிப்படப் பெற்றுக் கொண்டு வாழ்வு கொழித்திருக்கும் இவர்கள், தன்மானத் தமிழர்களை கந்தலும் கம்பலையும் கண்ணீருமாக இனரோசத்தைச் சொல்லி அலைய விடுவதற்கு எவ்வளவு கொழுப்பிருக்க வேண்டும்? என்றும் கோபத்துடன் கேட்டிருக்கிறார்.

அத்துடன், இந்த இனமானக் காவலர்களாக நாடகமிடுபவர்கள் தமிழர்களை அழித்தும், நம் பெரும் சொத்தாம் யாழ் நூல்நிலையத்தை எரித்தும் 'பெருமை' பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வந்தவர்கள் என்பது தமிழ்மக்களுக்குத் தெரியாத சங்கதி என்று நினைத்தா கதையளந்து கொண்டிருக்கிறார்கள்? நூல்நிலையத்தை எரித்ததில் இந்தச் சரவணபவனது தந்தையின் பங்கும் கூட இருக்கிறதென்றால், இவர்கள் எப்பேர்ப்பட்ட பரம்பரை மோசடிக்காரர்களாயிருக்க வேண்டும்? இவர்களையெல்லாம் எம்பிக்களாக்கி வைத்திருக்கும் கூட்டமைப்பும், அவர்களது ஊரை ஏமாற்றும் தமிழ்வீரவசனங்களும்.... தூ!!!

என்று தன் கடிதத்தில் கோபத்தைக் கொட்டியிருக்கிறார் கரவெட்டி அன்பன்.

# மாவையாருக்கு ஒரு மடல்...

மாவை ஐயா, உங்கள் வீராவேசமும் பொறிப் பறக்கும் பேச்சும் இன்று நேற்றையது அல்ல. அமிர் அண்ணையின் மங்கையக்காவே வியந்து பாராட்டிய வீராவேசப் புயல் நீங்கள்! உங்கள் வீரத்தையும் ஆவேசத்தையும் இன்னும் கூடவா தமிழ்மக்களை அழிப்பதற்கு நீங்கள் பாயவிட்டுக் கெண்டிருக்க வேண்டும்? என்று கேட்கும் கடிதமொன்று பெயர் குறிப்பிடாமல் சுன்னாகத்திலிருந்து வந்துள்ளது.

எம் தமிழ் மக்கள் சிந்திய செந்நீரும் செய்த தியாகங்களும் அரசாங்கம் தரும் அற்ப சலுகைகளுக்காக அல்ல என்று கூட்டமைப்பு எம்பிக்கள் வாய்பாடாகச் சொல்லிவருவது போலவே நீங்களும் பருத்தித்துறை தேர்தல் கூட்டத்திலும் அதை ஒப்புவித்திருக்கிறீர்கள். அற்ப சலுகைகள் என்று நீங்கள் சொல்வது, அரசாங்கத்திடம் பின்கதவால் போய் மகளுக்கு வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கோரியதையும், உறவினருக்கு வடக்கின் வசந்தத்தில் கட்டட ஒப்பந்தம் தருமாறு கோரியதையுமா? அல்லது வெளியே தெரிய வராத வேறு ஏதேனும் சலுகைக் கோரிக்கைகளா?

அதுசரி மாவையாரே! தமிழ்மக்கள் அடைந்த துன்பங்களுக்கும் செய்த தியாகங்களுக்கும் நீங்களா உரிமை கோருகிறீர்கள்? உங்களுக்கு வெட்கமாக இல்லை? மக்கள் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதும், புலிகள் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் உங்களைத் தேடியபோதும் நீங்கள் இங்குதானா இருந்தீர்கள் மாவை? அல்லது இந்தியாவிலா? ஏனென்றால், புலித்தேவனும் நடேசனும் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றபோதும் முடியவில்லை, குறுஞ் செய்தி அனுப்பியும் உங்களைப் பிடிக்க முடியவில்லை. நீங்கள் உங்கள் தொலைபேசிகளை அணைத்து வைத்துவிட்டு, சுகமாகத் தூங்கியிருந்தவர்களல்லவா? உங்கள் துரோகத்தைக் கண்டு புலிகள் பதறியபடியே உங்களை வைது தங்களையும் நொந்து கொண்டே போய்ச் சேர்ந்ததற்குச் சாட்சிகள் இன்றைக்குத் தப்பியிருக்கிறார்களே!



நீங்களா புலிகளுக்கும் மக்களுக்குமாக இன்றைகக்குக் கண்ணீர் வடித்துக் கதையளக்கிறீர்கள்? மக்களைச் சாகடித்ததில் உங்களுக்குப் பங்குண்டென்பதை உங் கள் மனசாட்சி மறுக்குமா? வெட்கமின்றி அவர்கள் பேரைச் சொல்லி வாக்குக் கேட்டு இன்று ஏனிந்த நீலிக்கண்ணீர்? மக்களைக் காப்பாற்றும் தலைவர்கள் என்று சொல்ல உங்கள் நெஞ்சே உங்களைச் சுடவில்லையா? இவ்வாறு நீண்டு செல்கிறது அந்தச் சுன்னாகம் கடிதம்.

# எம்மை மானமில்லாதவர்கள் என்று சொல்ல நீங்கள் யார்?

**யுத்தத்தால் பாதிக்கப்பட்டு உறவுகளையும், உடமைகளையும் இழந்து யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் வாழும் ஆசிரியர் சிலரின் உள்ளக் குமுறல்...**



தமிழர்களாகிய நாம் யாருக்கும் வாக்களிப்போம். எம்மை மானமுள்ளவர்கள் மானமில்லாதவர்கள் எனத்தரம் பிரிக்கயாருக்கும் தகுதியில்லை.

எம்மை அழித்த இராணுத் தளபதிக்கு ஜனாதிபதித் தேல்தலில் வாக்களிக்கும்படி கூறியவர்களை நாங்கள் நம்பத்தயாரில்லை.

எங்களது பிள்ளைகளும் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் வாழும் உங்களது பிள்ளைகளைப் போல கொஞ்சமாவது முன்னேற வழிவிடும்படி உங்களைக் கெஞ்சிக்கேட்கின்றோம். (யுத்தத்தால் பாதிக்கப்பட்டு உறவுகளையும், உடமைகளையும் இழந்து யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் வாழும் ஆசிரியர் சிலரின் உள்ளக் குமுறல்)

நீண்டகால யுத்தப் பிடியில் எமது கல்வி, தொழில்வாய்ப்பு, உடமைகள் உட்பட சகல சமூகப் பொருளாதார தேவைகளையும் இழந்து இப்பொழுது தான் எங்கள் வாழ்க்கையில் முன்னேற்றப் பயணம் ஆரம்பித்துள்ளது.

நாங்களும் எங்களது பிள்ளைகளும் உறவுகளும் எங்களது பிரதேசத்தில் நிம்மதியாகவும் வளமாகவும் வாழ ஆசைப்படுகின்றோம். எங்களது பிள்ளைகளைக் கொழும்பிலும் சர்வதேச பாடசாலைகளிலும், வெளிநாடு களிலும் படிக்கவைக்க எங்களிடம் பொருளாதார வசதி இல்லை. ஆனால் அத்தகைய வசதிகள் எல்லாம் எமது காலடி நோக்கி வருவதை எண்ணி நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆனால் எங்களுடைய வளமான வாழ்க்கையில் மண் அள்ளிப்போட்டு தங்களை மேலும் மேலும் வளப்படுத்தி எமக்கு உதவுபவர்களையும் எமக்கு எதிரிகளாக்கி திரும்பவும் எம்மை அதல பாதாளத்துக்குள் தள்ள திரும்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தங்களது பிள்ளைகளும் உறவுகளும் எமது பிரதேசத்தில் வந்து கல்வி கற்று வாழ்ந்தால் தான் நாங்கள் படும் வேதனை தெரியும்.

நாங்கள் துன்பப்பட்டபோது எங்களோடு கூட இருந்து எமக்கு உதவாதவர்கள் எங்களை அழித்த இராணுவத் தளபதிக்கே வாக்களியுங்கள் என்று கூறியவர்கள் எந்தவித சேவைகளும் இல்லாமல் இனவாதத்தை மட்டும் மூலதனமாகக் கொண்டவர்கள் பத்திரிகைகள் மூலமாக மட்டும் எம்மோடு பேசுபவர்களுக்கு எம்மை மானங்கெட்ட தமிழர் என்று கூறத்தகுதி இருக்கிறதா?

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இப்படிக் கூறுகிறது. ரோலர் தொழில் நிறுத் தப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கூட்டத்தில் பாடமறுத்த உணர்வுமிக்க தமிழர்கள் என்றெல்லாம் எமக்கும் எம்மக்களுக்கும் தேர்தல் காலத்தில் வாக்குக்ளைப் பெறபத்திரிகைகளில் செய்திகள் அள்ளிவீசப்படுகின்றன.

எம்மைத் தேர்தல்கால முட்டாள்களாக்கி எமது வாக்குகளை கபடத்தனமாகப்பெற மேற்கொள்ளப்படும் தேர்தல் கால முதலீடுகளே இவை. இவற்றையெல்லாம் பாதிக்கப்பட்டு வரும் தமிழர்களாகிய நாம் நம்பிய காலம் மலையேறி விட்டது.

இனவாதத்தை மட்டும் தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டவர்களே, உங்களிடம் நாங்கள் கெஞ்சி மன்றாடிக் கேட்கிறோம். எங்களை வாழவிடுங்கள். எங்களது பிள்ளைகளும் உங்களது பிள்ளைகள் போல முன்னேறாவிட்டாலும் நாங்களும் கொஞ்சம் முன்னேற வழிவிடுங்கள். இம்முறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலமாக அரசாங்க உதவிகளைப்பெற நாங்கள் ஆசைப்படுகிறோம். என்கஎளை அற்ப சலுகைக்காக ஆசைப்படும் தன்மானமில்லாதவர்கள் என்று சொல்ல நீங்கள் யார்?

# படலையடிப் பரமு



"சிலருக்கு மானசீகமாய் ஒரு எதிரி எப்பவும் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கு. தாங்கள் இருக்கிறம் எண்டதை வேறை ஒருமாதிரியும் அவைக்குக் காட்டேலாமல் கிடக்கு" எண்டபடியே படலையடிக்கு வந்தான் புத்தகக் கடைப்பொடியன்.

"என்னடாம்பி" எண்டு அவனிட்டைக் கேட்டு மினக்கெடத் தேவையில்லை சைக்கிளைச் சாத்தி வைச்சிட்டு வந்தானெண்டால் அவனாவே கொட்டுவான். சம்பாசணைப் பந்தை உருட்டி விளையாட அவனுக்கு எதிர்க்கன்னை தேவையில்லை.

"இல்லை இவங்கள் மக்களுக்கு கஷ்டங்கள் விலக என்ன செய்யப் போறம்... தீர்வை எப்பிடி வெண்டு தரப்போறம் எண்டு ஒண்டையுஞ் சொல்லுறாங்களில்லை. என்னமோ இவங்கள் தோத்துப்போனா இனமே அழிஞ்சுபோடும் எண்டு புலுடா விட்டுக் கொண்டிருக்கிறாங்கள். இவங்கள் இருவத்திரண்டு பேரை வெல்ல வைச்சு அழிஞ்சதை விடவே இனி அழியப்போறம்?"

"முகமூடியளில எப்பவும் ஒரே உணர்ச்சிதான். முகம் ஒருபோதும் அப்பயல்ல" எண்டார் கல்லில குந்தியிருந்த சாமிப் பண்டாரம்.



"இந்தாள் என்ன சொல்லுது? சம்பந்தர் மாதிரி விளங்காமல் கதைக்கக்கொண்டிருக்கிறதே இந்தாளுக்கு வேலையாப் போச்சு" எண்டான் பொடியன்.

"இல்லையடாப்பா, போலியாய் வீரம் பேசிக் கொண்டிருக்கிறவைக்கு வெறுப்பெண்ட ஒரே உணர்ச்சி தானிருக்காம், பகையையும், வெறுப்பையும் இனக்குழு ரோசத்தையும் கிண்டி விட்டுக் கொண்டேயிருப்பினம் எண்டு சொல்லுது சாமி" எண்டன்.

சாமிப் பண்டாரம் ஆகாயத்தைப் பாத்துக் கொண்டே சொல்லிச்சுது. "வெறுப்பு எண்டது ஒரு நோய். நான் எண்டைக்கும் ஆரோக்கியமாய் இருக்கவும், வாழவும் ஆசைப்படுறன்."

பொடியன் சிரிச்சான். "இஞ்ச பார், எல்லாந் துறந்த சாமியே வாழ ஆசைப் படுது. எங்கட கூட்டமைப்புக்காறர் வாழவிரும்புற சனத்தை தன்மானத் தோடை உயிரை விடச் சொல்லுகினம். தாங்கள் பின்கதவாலை அரசாங்கத் திட்டை வாங்கிறதெல்லாம் அடிப்படை வசதிகளாம், அப்பாவி மக்கள் வாழுறதுக்கு வாங்கிற உதவியளெல்லாம் அற்ப சலுகைகளாம்! அற்ப சலுகையளுக்கு விலை போகிற சனம் துரோகியளாம்! எப்பிடிக் கதை?"

"இந்த பூமித் தோலின் மீது நோய்கள் பலவுண்டு. அந்நோய்களில் ஒன்று 'மனிதன்' என்றழைக்கப்படுகிறது" எண்டது சாமி.

"சாமி தன்னையும் ஒரு நோய் எண்டு ஒத்துக்கொள்ளுது" எண்டு சிரிச்சான் பொடியன்.

"அதைச் சொன்னது நானில்லை, நீட்ஷே"

"ஆர் சொன்னா என்ன? தொடர்ந்து ஒரே நோய் காவிகளாய் இருக்குதுகள். எப்பவும் தங்களோடை ஒத்துப் போகாதவையைத் துரோகி எண்டுறதும், பிறகு அவையைக் கொல்லச் சொல்லி உசுப்பேத்துறதும் இந்த வன்முறை நோய் காவியள்தான்! இப்ப, வாழத் தேவையான சாமான் சண்டுக்கு அலையிற சனத்தையும் துரோகியள் எண்டு முடிச்சிருக்கினம்..." எண்டு நான் சொல்லிக் கொண்டிருக்க மாஸ்ரரும் வந்தார்.

"என்ன நோய் கீய் எண்டு கதை அடிபடுகுது?" எண்டார்.

"வாருங்கோ மாஸ்ரர்! மக்களைச் சாகக் குடுக்கிறதுக்கெண்டே மேடையளில முழங்கித் திரியிற நோயளைப் பற்றித்தான்..."

மாஸ்ரர் கொடுப்புக்குள்ள சிரிக்கிறதைப் பாத்திட்டு, நீ வாயைத் திறந்து குழப்பிப் போடாதை எண்டு பொடியனுக்குக் கண்ணாலை சொன்னன்.

"பரமு, உதிலை சாய்ஞ்சு நிக்க விடு" எண்டு கேட்டு என்னைத் தள்ளிப் போட்டு மாஸ்ரர் சொன்னார். "நீங்கள் சொல்லுற நோய் காவியளுக்கு இப்ப வேற நோய்களும் வரும்போல எல்லே கிடக்கு..." எண்டு இழுத்தார்.

"புண்ணாம் நரகக் குழியிடை விழுந்து...." எண்டு தொடங்கின சாமியை "பொத்து சாமி" எண்டு நிறுத்தினான் பொடியன்.

"ஓமோம், தின்னவேலியில பூக்கட்டுற பொம்பிளை ஒண்டு, கொழும்பிலையிருந்து பிரச்சாரத்துக் கொண்டு வந்த அந்த மனோகரமான நடிகர் மகனும், அவரை அழைப்பிச்ச பிரேமமான வரும் தன்னை றூம் எடுத்துத் தங்கவைச்ச கதையைச் சொல்லுதாம்! கிலிசகேடு ஊர் முழுக்கப் பரவியிட்டது.



"பிரேமானந்தாசாமி கதையாயெல்லோ கிடக்கு" எண்டான் பெடியன்.

சாமி முறைத்தது.

"உந்த நாறல கதையளை விட்டிட்டு, நடக்க வேண்டிய கதையயைப் பேசுங்கோ, கேடுகெட்ட வேலையெல்லாம் செய்வினம். சனத்திட்டை வந்து வீரவசனங்கள் சொல்லி உசுப்பேத்துவினம். வெளிநாடுகளெல்லாம் சுத்தி அடுத்த எலக்சனுக்கு வந்து இறங்குவினம். அரசாங்கத்தையும் சிங்களவரையும் எதிர்த்து அசிங்க அசிங்கமாய் நெருப்புக் கக்குவினம். இந்தச் சுத்து மாத்து வளையத்துக்குள்ளயிருந்து சனம் வெளியவாற வழியைச் சொல்லுங்கோ..."

"புகைவிடும் விறகை அடுப்புக்கு வெளிய எடு" எண்டு கரகரத்துச் சொல்லிச்சுது சாமி.

"இந்தப் பண்டாரத்தின்ர தொல்லை பெருந்தொல்லை. விளங்காமல் கதைக்கிறதே வேலையாய் போச்சு" எண்டான் பொடியன்.

"சனத்துக்கு எந்த உதவியையும் இதுவரை சாதிச்சிராத வெத்துக்கூட்டத்தை வெளியேத்திப் போட்டு மக்கள் பிரச்சினையைக் கவனமாய் அணுகிறவையைக் கொண்டுவாங்கோ எண்டு சாமி சொல்லுது" எண்டார் மாஸ்ரர்.

"ஓமோம். வசதி வாய்ப்புகளைப் பின்கதவாலையும் சனத்தின்ர காசைச் சுருட்டியும் எடுத்துக் கொண்டு யுத்தம் முடிஞ்ச இப்பவும் ஏதோ பாதுகாப்புக்குக் கொண்டுபோய் வைச்சிருக்குமாப் போல வெளிநாடுகளில குடும்பங்களை விட்டு வசதியளோடை இருக்கிறவைக்கு, சனத்தின்ர வாழுற விருப்பத்தையும், தேவையளையும், விளங்கிக் கொள்ளேலாதுதான். அற்ப சலுகையளுக்குத் தன்மானத்தை வற்கிறார்கள் எண்டு புளிச்சல் கதையள்தான் வரும். சண்டை முடிஞ்சுது... இனிச் சனத்துக்கு என்ன எண்டதுக்கு ஒரு திட்டமுமில்லை, தீர்மானமுமில்லை, ரோசத்தில் வாக்கள்ளிப் போட வேணுமெண்டு நினைக்கினம்... கொழுப்புத்தான்!



"சும்மா சண்டித்தனத்தைப் பேசிக் கொண்டிருக்கிறது, சனத்தைச் சாகக் குடுத்து அரசியல் லாபம் தேடுகிற பேய்க்காட்டுத்தான். வளைய வேண்டிய இடத்தில வளைஞ்சு சனத்தைக் காப்பாற்றிக் கொண்டு நிரந்தரத் தேவைக்கு முன்னகருறது தான் விவேகம்" எண்டார் மாஸ்ரர்.

"எந்த அளவுக்கு வில்லு வளைஞ்சு குடுக்குதோ அந்தளவுக்கு அம்பு விசையாய் வெகுதூரம் பாயும்" எண்டது சாமி.

"அதுதான் விசயம்! வளைய வேண்டிய இடத்தில் வளையிறதும், பாய வேண்டிய இடத்தில அம்பு போல விறைப்பாய் பாயுறதும் தான் விவேகம. போரால நொந்த மக்களை நிமிரச செய்யிறதும், அடுத்த கட்டத்துககுப் போறதும் இணக்கமான செயல்களால தான் இப்ப சாத்தியம். அதைவிட்டிட்டு வீறாப்பாயப் பேச்சை மட்டும் விண்ணை இடிக்கிற மாதிரி அளந்து கொண்டிருக்கிறது விவேகமற்ற செயல்மட்டுமில்லை. கடைஞ்செடுத்த ஏமாத்து வேலையுமாகும்" எண்டார் மாஸ்ரர்.

வேறையென்ன சொல்லக் கிடக்கு?.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை....

எநதவித உத்தரவாதத்தையும் தரமுடியாத ஒரு விடயத்திற்கு தமிழ் மக்களின் வாக்குகளைக் கேட்டு நிற்கின்றனர். இவர்களது இதுவரைகால அரசியல் வேலைமுறைகள் அனைத்தும் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றை இன்னும் இன்னும் சிக்கலாக்கி வந்துள்ள நிலையில், இவர்கள் ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் இவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் அனைத்தும் வீணாணவையே. இவர்களது பிரச்சாரப் பொய்களில் போதையேறிள்ள தமிழ மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப பிரச்சினைகளைத் தீர்க்க தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் இதுவரை முன்னெடுத்த வேலை முறைகளில் எமது மக்கள் பெற்றுக் கொண்டதென்ன?



உலகிலுள்ள அதிகளவில் இடம பெயர்ந்த சமூகங்களுள் ஒன்றாக தமிழ் சமூகமும் உள்ளதாக சர்வதேச தரவுகள் கூறுகின்றன. ஏறத்தாழ ஏழுலட்சம் மக்கள் எமது நாட்டினுள்ளேயே இடம்பெயர்ந்திருந்துள்ளனர். இவர்களுள், இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டின் பின்னர் இடம் பெயர்ந்தவர்கள் மட்டும் இரண்டரை லட்சம் பேர். வடக்கிலிருந்து இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்ட ஒரு லட்சம் முஸ்லீம் மக்களும் இவர்களுள் அடங்குவர். இவர்களைவிட ஏறத்தாழ ஐம்பதினாயிரம் மக்கள் அகதிகளாக இந்திய அகதி முகாம்களில் வசிக்கின்றனர். இவர்களுடனும், இந்தியாவிலீ ஏனைய இடங்களில் இடம் பெயர்ந்துள்ளவர்களுடனும், ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் அனைத்து நாடுகளில் அகதிகளாக புலம் பெயர்ந துள்ளவர்களுமாக, ஏறத்தாழ ஒன்றரை மில்லியன் இலங்கை மக்களை இதுவரைகால தமிழ் தேசிய அரசியல் தலைமைகளின் போராட்ட வழிமுறைகள் 'வேரோடு பிடுங்கி வெளியில் எறிந்துள்ளதாக' ஆய்வுகள் கூறுகின்றன. வட-கிழக்கில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ அரைவாசியாகியுள்ளதை நாங்கள் ஒரு அபாய அறிவிப்பாகவே கொள்ள வேண்டும். மலையக மக்களை தவிர்த்தால், இலங்கையின் மொத்த சனத்தொகையில், நாங்கள் இன்று 8.5 வீதமாகவே உள்ளோம்.

இதுதவிர, இதுவரைகால யுத்தம் ஏறத்தாழ ஒரு லட்சம் உயிர்களை பலி கொண்டுள்ளதாக ஒரு கணக்கு உணடு. உண்மையான உயிர் இழப்புகள் இதனைவிட அதிகம். இவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் அப்பாவிப் பொதுமக்களே. இறந்தவர்களைத் தவிர, கண்ணி வெடியினால் கை-கால் இழந்துபோனவர்கள் வட-கிழக்கில் வசிக்கும் மக்களில் ஏறத்தாழ 5 வீதம் என கணிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.

இறந்தவர்களையும், இடம்பெயர்ந்தவர்களையும் தவிர, இதுவரைகால யுத்தத்தில் எமது மக்கள் இழந்தவைகள் இன்னும் அனேகம்.

குறிப்பாக, இதுவரைகால கொடிய யுத்தத்தால் ஏறத்தாழ ஒரு லட்சம் பெண்கள் விதவைகளாக வட-கிழக்கு மாகாணங்களில் வசிக்கின்றனர். இவர்களுள் ஒரு பெரும் பகுதியினர் வாழ வழியற்ற ஏழைகள். பலர், பெருங் குடும்ப பாரத்தையே சுமக்க வேண்டிய பரிதாப நிலையிலுள்ளவர்கள். இதுவரைகால யுத்தத்தால், ஒரு வேளை உணவுக்கே இன்னொருவரிடம் கையேந்தவேண்டிய நிலைக்கு இவர்களை நாங்கள் இட்டுச்சென்றுள்ளோம்.

இவை தவிர எமது மக்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தையும் இந்த யுத்தம் சீரழித்து சிதைத்துள்ளது. ஏறத்தாழ ஐம்பது வீதமான எமது மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சிரமங்களுண்டு. மருத்துவத்துறையில் ஆளணி பற்றாக்குறை அபாயகரமான அளவு அதிகரித்து வருகிறது. பல பாடசாலைகளும், வைத்தியசாலைகளும் முற்றாக இயங்க முடியாத நிலைமையிலுள்ளன. ஆசிரிய பற்றாக்குறையும் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது.

எமது மக்களில் ஏறத்தாழ இருபத்தைந்து வீதமானவர்கள் இதுவரைகால யுத்த வழிமுறைகளால் ஏதோவொரு வித மனநோயினால் பாதிப்படைந்து வாழ்கின்றனர். இவர்கள் போதுமான மருத்துவ வசதிகளைப்பெற எமது பகுதிகளில் எந்த ஏற்பாடுகளுமில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எவை பற்றியும் அக்கறைப்பட்டதில்லை என்பது கண்கூடு. இவைகளே நாம் கவனம் கொள்ளவேண்டிய உடனடிப் பிரச்சினைகள். இவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒரு அரசியல் தலைமையே இப்போதைய தேவை. இச் சூழ்நிலையில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களை உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தில் அமர்த்துவதே தமிழ் வாக்காளர்கள் செய்யும் புத்தி சாதுரியமான விடயமாக இருக்கும்.

**இதய சுத்தியுடன் இலங்கையிலுள்ள சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக கூடிய நடைமுறைச்சாத்தியமானதொரு அரசியல் தீர்வுக்கு வருவ்தற்கும், வெறும் குறை கூறும் அரசியலை விடுத்து ஆளும் அரசுடன் ஐக்கியப்பட்டு வேலை செய்யக்கூடிய ஒரு அரசியல் தலைமையை தெரிவு செய்வதே தமிழருக்கு நன்மை பயக்கும். அத்தரப்பும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களே என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கப்போவதில்லை.**

எனவே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு எமது மக்களின் எதிர்காலத்தில் அக்கறையுள்ள அனைவரையும் வேண்டுகிறோம்.